முத்து 26 | வாரப் பத்திரிகை | 26-3-39

# பாரத மணி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி




முக்கிய விஷயங்கள்


பழைய கிராம சபைகள்
—"புராணிகன்"

முருகன் கடிதம்
—"சிட்டி"

இல்லோனி (தொடர் கதை)
—"குகப்ரியை"

முதல் வாயிதா
—சிறு கதை.

கல்வி அனுபந்தம்.



காரியாலயம் : 312, தம்பு செட்டித் தெரு, சென்னை

தனிப்பிரதி— ஒரு அணா (32 பக்கங்கள்) வருஷ சந்தா ரூ. 3.

THE BHARATAMANI
12, Thambu Chetty St., Madras.

Editor :
K. S. VENKATARAMAN

# GODREJ

## காத்ரெஜ் சோப்புகள் நெ. 1 & 2.

காத்ரேஜ் டாய்லேட் சோப்புகள் மிருகக் கொழுப்பு சம்பந்தமில்லாத சுத்தமான தாவர எண்ணெயினால் தயாரிக்கப்பட்டது. மிருகக் கொழுப்பு வியர்வை துவாரங்களை அடைத்து அதனால் வியர்வை நீர் தாராளமாக வருவதைத் தடுத்து சருமத்திற்குக் கெடுதியைச் செய்கிறது.

காலஞ்சென்ற மிஸ்டர் A. B. காத்ரெஜின் ரகசியங்களான சாம்பிராணித் தைலம் இன்னும் விலைமதிக்க வொண்ணாத இதர மருந்து வகைகள் இவைகளைக் கொண்டு இந்த சோப்பு செய்யப்பட்டுள்ளது. இப்போது காத்ரெஜ் மானேஜ்மெண்டாருக்கு மாத்திரமே அதன் வகை தெரியும். இதனால்தான் இந்த ஸோப்புகள் அனேக சரும சம்பந்தமான வியாதிகளை நீக்குகின்றன. இதற்கு இங்கிலாந்து, பிரெஞ்சு, ஜர்மெனி முதலிய இடங்களில் உள்ள சருமவைத்திய நிபுணர்களும், இந்திய சரும வைத்திய நிபுணர்களும் நற்சாக்ஷி பத்திரம் அளித்து இருக்கிறார்கள்.

டைபாயிட் முதலிய ஜுரங்களுக்குக் காரணமான ஸ்ராப்டகோகஸ், ஸ்டாபிலோகோகஸ் முதலிய பூச்சுகளைக் கொல்லும்படியான சக்தியையும் இது பெற்றிருக்கிறது.

காத்ரேஜ் சோப் கம்பெனியார் தயாரிக்கும் சோப்புகள் பிரபல சரும வைத்தியர்களாலும் ஜர்மன் ஆராய்ச்சிக்காரர்களாலும் ஷை சோப்புகள் ஆரோக்கியமும் அழகும் தரக்கூடியவைகள் என்று புகழ்ந்து நற்சாக்ஷி பத்திரங்கள் அளிக்கப்பட்டுள்ளது. ஸ்திரீகளுக்காக தயாரிக்கப்பட்ட டாய்லட் சோப்புகளில் இதுவே மேம்பட்டதாகும்.


முக்கிய கவனிப்பு:—எல்லாவிதமான காட்ரேஜ் டாய்லட் சோப்புகளும் "சாவி" மார்க்கையும் "ஸோல் ஏஜண்டுகள்:—நாதர்ஷா பிரிண்டர் & கம்பெனி" என்னும் அடையாளத்தையும் பெற்றிருக்கிறது.

தொழிற்சாலை:—காத்ரேஜ் சோப்ஸ் லிமிடெட்,
316, டெஸில் ரோட், பம்பாய்.

டிஸ்ட்ரிப்யூடர்:—

**என். எஸ். ருமன்**

தபால் பெட்டி
நெ. 1278,
**மதறஸ்.**



# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.


| மாலை 1 | ஞாயிறு 26-3-39 வெகுதான்யஹூ பங்குனிமீ 13உ | முத்து 26 |
|---|---|---|


## பொருள் அடக்கம்

விஷயம் பக்கம்


1. யுத்த முரசு ... 722
2. "ஜனநாயக ஆட்சியா இது?" ... 724
3. போகிற போக்கில் ... 726
4. வார நடப்பு ... 728
5. முருகன் சந்தேகம் ("சிட்டி") ... 729
6. கிராமசேவை (ஸ்ரீ. எஸ். ராமஸ்வாமி) ... 730
7. பழைய கிராம சபைகள் (புராணிகன்) ... 732
8. முதல் வாயிதா (ஸ்ரீமதி செல்லம்) ... 734
9. இல்லொளி (குகப்ரியை) ... 738
10. சிறுவர் பகுதி ... 742
11. வலைவீச்சு ... 744
12. உடலினை உறுதிசெய் (ஸ்ரீ. ரகுநாதய்யர், பி. ஏ., எல். டி.) ... 745
13. ஒளியின் இயல்புகள் (ஸ்ரீ. ஆர். கே. விசுவநாதன், எம். ஏ.) ... 748
14. வாலாஜாபாத் பள்ளிக்கூடம் (வஸந்தன்) ... 750



"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# யுத்த முரசு

ஜெர்மனி சென்றவாரம் ஸெக்கோஸ்லோவேகியாவைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிட்டது. ஐரோப்பிய நிலைமையை இவ்வளவு நாளாகக் கவனித்து வந்தவர்களுக்கு இதில் ஆச்சர்ய மிராது. பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு இது ஆச்சர்யமாக இருக்கலாம். பிரஞ்சு பிரதம மந்திரி ஸ்ரீ. டலாடியர் திடுக்கிட்டு மயக்கமடையலாம். ஆனால் அதற்கு ஜவாப்தாரி ஹிட்லரல்ல. ஹிட்லரின் போக்கும் நோக்கங்களும் வெட்ட வெளிச்சமானவை.

ஹிட்லர் தனது சுயசரிதையில் சொல்லியதை இப்போது நடத்திக் காண்பிக்கிறார். மகாயுத்தத்துக்கு முன்னால் ஜெர்மனி எந்த அந்தஸ்தில் இருந்ததோ அதை மீண்டும் கொண்டுவர விரும்பினார். இப்போது அதை பலமாக சக்தி வாய்ந்த நாடாக அமைத்து விடவேண்டுமென்பது ஹிட்லரின் புதிய கனவு. வர்ஸேல்ஸ் உடன்படிக்கையை ஹிட்லர் கிழித்தெறிந்த நாளிலிருந்து இப்போது ஸெக்கோஸ்லேவேகியாவை விழுங்கிய வரையில் ஒவ்வொரு தடவையிலும் இந்த மனப்பான்மை நன்றாகத் தெரிகிறது. ஹிட்லர் ஒவ்வொரு காரியம் செய்யும்போதும் அதற்கு ஒரு சாக்குச் சொல்லுவது வழக்கம். ஆனால் அந்தச் சாக்கை ஏன் நம்பவேண்டும்?

வர்ஸேல்ஸ் உடன்படிக்கை அநியாயமானது, ஜெர்மனிக்கு அவமானம் உண்டாக்குவது,—ஆகையால் அது கூடாது. ஆஸ்திரியாவிலும் ஸுடேடன் பிரதேசத்திலும் ஜெர்மானியர் வசிக்கிறார்கள்—ஆகையால் அவர்களை ஒன்று சேர்க்க வேண்டும்......இப்படியாக சமாதானங்கள் சொல்லி ஹிட்லர் தன் லக்ஷியத்தை நிறைவேற்றிக் கொண்டே வந்தார். இத்தகைய காரியங்களால் விளையக்கூடிய விபரீதங்களை உலகம் சிந்தித்துப் பார்த்தது. அப்பொழுதே சில ராஜதந்திரிகள் சொன்னார்கள்: "ஹிட்லரை அடக்காவிட்டால் உலகத்துக்கு ஆபத்து. உடனே ஜனநாயகங்கள் சேர்ந்து கொண்டு ஜெர்மனியின் திமிரை ஒழிக்க வேண்டும்." இந்த வார்த்தைகளுக்கு ஜனநாயக சர்க்கார்கள் ஏன் செவிசாய்க்கவில்லை?

ஸ்ரீ சேம்பர்லேனும் ஸ்ரீ டலாடியரும் சேர்ந்து கொண்டு ஹிட்லருடன் கொஞ்சம் சமாதானம் பேச முற்பட்டார்கள். "எப்படியாவது ஹிட்லரைச் சாந்தப்படுத்திவிடலாம். ஸுடேடன் பிரதேசத்தை வேண்டுமானால் பலி கொடுத்து விடுவோம். இனிமேலாவது ஹிட்லர் தொந்தரவு கொடுக்காமல் இருந்தால் போதும்" என்று சதிசெய்து ஸெக்கோஸ்லோவேகியாவை துண்டம் போட்டுக் கொடுத்து விட்டார்கள்.

அப்படியும் ஹிட்லர் தாகம் அடங்கவில்லை. ஸெக்கோஸ்லோவேகியாவில் உள்நாட்டுக் கலகத்தை மூட்டிவிட்டு கடைசியில் இரண்டு கட்சிகளையும் கையில் போட்டுக்கொண்டு தேசத்தை ஜெயித்து விட்டார். சுதந்திரத்தைப் போற்றி வளர்த்த அத்தேசத்தின் மக்கள் அடிமைகளாகி விட்டார்கள்.

ஹிட்லரை வழிக்குக் கொண்டுவந்து விடலாம் என்று நினைத்த சேம்பர்லேன் ஏமாந்து போனார். உண்மையைக் கூறப் போனால் அவர் ஏமாறவில்லை என்றுதான் சொல்வோம். ஹிட்லரின் உண்மை ஸ்வரூபம் அவருக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் கடைசித் தடவையாகப் பார்க்கலாம் என்று தான் மியூனிச்சில் ஒப்பந்தம் செய்து கொண்டார் என்று நினைக்கிறோம். மேலும், இங்கிலாந்து ஆயுத முஸ்தீப்புத் திட்டத்தை அப்போது நடத்திக் கொண்டிருந்தது. ஆகையால் அத்தகைய சந்தர்ப்பத்தில் யுத்தத்தை வரவழைத்துக் கொள்ள அவர் விரும்பவில்லை. கடைசி

யாக, யுத்தம் நேர்ந்தால் ஏற்படும் கஷ்டங்களையும் அவர் தவிர்க்க விரும்பினர். ஆனல் அது முடிந்ததா?

நிலைமை இவ்வளவு தூரம் மோசமாய் விட்ட பிறகு, இனிமேல் ஸ்ரீ சேம்பர்லேன் தீர்மானமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுவார் என்று எதிர் பார்க்கிறோம். மியூனிச் ஒப்பந்தத்தை மீறி விட்டதாக பிரிட்டன் விடுத்த ஆக்ஷேபணையை ஜெர்மனி நிராகரித்து விட்டது.

"இதெல்லாம் உம்மை யாரையா கேட்டார்கள்? இதைப்பற்றி பேச உமக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? உங்களுக்கு மட்டும் சாம்ராஜ்யமில்லையா?" என்ற தொனியில் பதில் சொல்லி விட்டது ஜெர்மனி.

இந்த சந்தர்ப்பத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொள்கையை ஹிட்லர் இடித்துக்காட்டியதை ஸ்ரீசேம்பர்லேனும் அவர் சகாக்களும் நன்றாக உணர வேண்டும். லார்ட் ஹாலிபாக்ஸ் எவ்வளவு மழுப்பிப் பேசினலும் உண்மையை மறைக்க முடியுமா? 'சுயேச்சை' என்று பிரிட்டன் சொல்லும் போது அது உண்மையில் 'சுயேச்சையில்' நம்பிக்கை வைத்திருக்கிறதா என்பதுதான் முக்கியம். தனக்குக் கீழுள்ள நாடுகளுக்குச் சுயேச்சை கொடுத்து விட்டால் ஹிட்லர் கேலி செய்ய வழி எங்கே இருக்கிறது? சாம்ராஜ்ய நாடுகளும் பிரிட்டனுடன் சேர்ந்து முழு பலத்தோடும் போராடத் தயாராக இருக்குமல்லவா?

பர்மிங்ஹாமில் சேம்பர்லேன் கடுமையாகப் பேசுவதாலும், லண்டனில் ராஜதந்திரிகள் கூடிப் பேசுவதாலும் ஹிட்லர் பயப்படமாட்டார். நிலைமையைச்சமாளிக்க வேண்டுமானல் பிரிட்டன் பின்வரும் இரண்டு காரியங்களில் ஒன்றை அவசியம் செய்யவேண்டும்.

முதலாவதாக, ஹிட்லர் கோரிக்கைகளை என்ன என்று தெரிந்து கொண்டு அவைகளைத் திருப்தி செய்து விடவேண்டும். இப்படிச் செய்தால் சேம்பர்லேன் விரும்புகிறபடி யுத்தத்தைத் தடுத்து விடலாம். ஆனல் ஹிட்லர் கோரிக்கைகள் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறலாம்; அதிகரிக்கலாம். அவற்றை எல்லாம் திருப்தி செய்துவிட்டால் வம்பே இல்லை. உதாரணமாக, அவர் ருமேனியாவுக்கு பயமுறுத்தல் கடிதம் எழுதிவிட்டார் என்று கூறப்படுகிறது. கடைசியாக, மெமல் பிரதேசத்தின்பேரிலும் ஹிட்லர் காலை எடுத்து வைத்துவிட்டார் என்று அறிகிறோம். நாளைக்கு போலந்த், யுகோஸ்லாவியா துருக்கி, பல்கேரியா, இவைகளையும் ஜெர்மனி பக்ஷணம் செய்ய ஆசைப்படும். அதோடு ஜெர்மனியின் ஆசை நிற்குமா என்பது ஒருவருக்கும் தெரியாது. இப்படிப்பட்ட எல்லையற்ற ஆசையை சேம்பர்லேன் பூர்த்தி செய்வதாயிருந்தால் நமக்குச் சந்தோஷம்தான்.

இப்படிச் செய்ய இஷ்டமில்லா விட்டால், பிரிட்டன் சாம்ராஜ்யத்திலுள்ள அடிமை நாடுகளுக்குச் சுயேச்சை கொடுத்து சுயேச்சையில் கருத்துள்ள நாடுகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஹிட்லருடன் 'சுயேச்சைப் போர்' நடத்தத் தயாராக இருக்க வேண்டும்.

இந்த ஒற்றுமையான ஆயுத சக்தி தனக்கு எதிரே இருக்கிறதென்றல் ஹிட்லர் ஒரு வேளை பேசாமல் இருந்தாலும் இருக்கலாம்.

இவ்வளவு காலம் ஹிட்லர், பிரிட்டனும் ரஷ்யாவும் ஒன்று சேராது என்று பலமாக எண்ணியிருந்தார். இப்போது நடக்கும் சம்பவங்கள் அவரை குலை நடுங்கச் செய்திருக்கும்.

மேற்சொன்ன இரண்டு காரியங்களும் மிகவும் கஷ்டமானவையாகத் தோன்றலாம். ஆனல், ஹிட்லர் போர் முரசைக் கொட்டிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் அந்தக் காரியங்களில் ஒன்றைச் சீக்கிரம் செய்யவேண்டும். இல்லாவிட்டால்... ஆம்; சர்வ நாசந்தான்.

குறிப்பு:

# "ஜனநாயக ஆட்சியா இது?"

சென்னை சட்டசபை பட்ஜட் விவாதத்தில் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சர்க்காரை வாய்கொண்டமட்டும் வைது தீர்த்துவிட்டார்கள். இந்த சந்தர்ப்பத்தை விட்டால் வேறே எப்போது இவ்வளவு தாராளமாகப் பேசமுடியும்? சர்க்காரைத் தாக்குவதற்கு எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்குப் பூரண உரிமை இருக்கிறதல்லவா?

ஆனால் அவ்வளவு பேர்களாலும் காரசாரமாகப் பேசமுடியவில்லை. ஸ்ரீ அப்துல் ஹமீத் கானும் ஏதேதோ சொல்லித்தான் பார்த்தார்; ஸர் பன்னீர்செல்வத்துடன் போட்டி போட்டு அவரைப்போல் அவ்வளவு அர்த்தமில்லாமல் தாக்கிப்பேச முடியவில்லை. ஸர் பன்னீர்செல்வம் இன்னதுதான் சொல்லலாம் சொல்லக்கூடாது என்ற கட்டே இல்லாமல் வாய்க்கு வந்ததை எல்லாம் பேசினார். ஒரே ஒரு மாதிரிச் சரக்கை மட்டும் இங்கே எடுத்து ஆராய்ந்து பார்ப்போம்.

"பொது ஜன அபிப்பிராயத்தைக் கொஞ்சங்கூட சட்டை செய்யாமல் உங்கள் இஷ்டம் போல் சட்டம் செய்கிறது; எதிர்க் கட்சியைக் கொஞ்சம் கூட லட்சியம் செய்யாமல் காரியம் நடத்துகிறது; எங்கோ மாகாணத்திற்கு வெளியே இருக்கும் ஒரு ஆஸாமியின் உத்தரவின்படி நடக்கிறது; இதெல்லாம் என்ன? ஜனநாயக ஆட்சியா இது? சர்வாதிகாரமாயிருக்கிறதே! கேள்வி முறை இல்லையா?" என்ற மாதிரி இன்னும் கூரிய பாஷையில் பேசினார். ஸர் பன்னீர் செல்வம் தெரிந்துதான் பேசுகிறாரா அல்லது தெரியாமல் தான் பேசுகிறாரா என்று கூட மனத்தில் குழப்பம் ஏற்படும்படியாக இருக்கிறது, அவர் வசைமாரி பொழியும் முறை! இவ்வளவு சூக்ஷமமாகவும் விஷமமாகவும் பேசக்கூடியவர் தெரியாமலா பேசுவார்? தெரிந்து தான் பேசுகிறார்.

பெருவாரிக் கட்சியின் சார்பாகச் செய்யப்படும் காரியங்களை எப்படி ஸர் பன்னீர்செல்வம் ஜனநாயக முறைப்படி இல்லை என்று சொல்லுகிறார்? பின் ஜனநாயகம் என்பது தான் என்ன? ஸர் பன்னீர் செல்வத்தின் ஜனநாயக தத்துவத்தைத்தான் அவர் கொஞ்சம் விளக்கக்கூடாதோ? காங்கிரஸ் சர்க்காரின் போக்கு என்று பெருவாரியான அங்கத்தினர்களின் ஆதரவில்லாமல் இருக்கிறதோ அன்றுதானே ஜனநாயகம் இல்லை என்று சொல்லலாம். பெருவாரி ஆதரவு இல்லாமற் போகும் நிமிஷமே சர்க்காரும் கவிழ்கிறது. அவ்வளவு தானே? பெருவாரிக்கட்சியின் தலைவராக ஒருவர் செய்யும் காரியங்களை கட்சி ஆதரவுடன் அவர் செய்வதாகத்தான் ஜனநாயக நாடுகள் எல்லாவற்றிலும் கருதப்படுகிறது. இல்லாமற்போனால் அவர் எப்படிச் செய்யமுடியும்? கட்சிக்கு விரோதமாக அவர் ஏதாவது செய்தால் அவர் தலைவராக மறு நிமிஷம் இருக்க முடியுமா? இது ஸர் பன்னீர்செல்வத்திற்குத்தான் தெரியாமல் இருக்க முடியுமா?

பொது ஜன அபிப்பிராயத்திற்கு விரோதமாக காங்கிரஸ் சர்க்கார் நடந்துகொள்கிறது என்பது உண்மையானால் என் இன்னும் பதவியிலிருக்கிறது! ஸர் பன்னீர்செல்வம் ஏன் சும்மா இருக்கிறார்? அவருக்கல்லவா இப்பொழுது பெருவாரி ஆதரவு கிடைத்திருக்கவேண்டும்? கிடைத்திருக்கிறதா?

## நிலவரி மசோதா

நிலவரி மானியம் கேட்டபொழுது ஸ்ரீ பிரகாசம் சர்க்கார் கொள்கையைப் பற்றிக் கொஞ்சம் சூசனை செய்தார். நிலவரியைக் குறைத்து நிர்ணயிக்கும் விஷயத்தில் ஆலோசனைகள் அநேகமாகப் பூர்த்தியாகி விட்டனவாம். கூடியசீக்கிரத்தில் அவற்றை சர்க்கார் ஒரு மசோதாவாக சட்டசபைக்குச் சமர்ப்பிக்கப் போகிறார்களாம். இனிமேல் நில வரியைக் குறைக்கவோ அதிகப்படுத்தவோ நிர்வாகத்திற்கு அதிகாரமில்லை; சட்டசபைகள் நில வரி நிர்ணயத்திற்கு அதிகாரம் கொண்டது என்றது தான் முக்கியமான விஷயம்.

விற்பனைவரி விஷயமாக நாட்டில் கிளர்ச்சி அதிகமாகிக் கொண்டுவருகிறது. வரியால் பாதிக்கபடாதவர்களைக் கூட கட்டியிழுத்துக்கொண்டு கூச்சல் போடுகிறார்கள் கிளர்ச்சி செய்கிறவர்கள். அறியாமை மிகுந்த இந் நாட்டில் ஜனங்கள் சுலபமாக எதையும் நம்பிவிடக் கூடும். அதனால் காங்கிரஸின் செல்வாக்குகூட பாதகப் படும். இந்த சமயத்தில் நிலவரிமசோதாவை சர்க்கார் பிரசுரித்து பகிரங்கப் படுத்துவது நல்லது. காங்கிரஸ் எதிரிகள் வாய் கொஞ்சம் அடைபடும், அதற்காகப் பயந்து கொண்டு நடப்பது முடியாதென்பது நிச்சயம்; ஆனால் காங்கிரஸ் நாட்டில் இந்தத் தருணத்தில் செல்வாக்கை இழப்பது நல்லதல்ல; காங்கிரஸை அது பாதிப்பது எவ்வளவு தூரம் நாட்டிற்

குக் கெடுதல் என்பது சொல்லத் தேவையில்லை. எதிரிகளின் விஷமப் பிரசாரத்தை பொதுமக்கள் சுலபமாக நம்பிவிட முடியும்; எதிர்பாராத விபத்துகூட ஏற்படும்; ஆகையால் தொழிலாளர் சம்பந்தமான சீர்திருத்த மசோதாவையும், நிலவரி மசோதாவையும் உடனே கொண்டு வரும்படி நாம் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறோம். அப்படிச் செய்தால்தான் வியாபாரிகளின் கூக்குரல் அடங்கும்

## பிரசாரத்தின் அவசியம்

காங்கிரஸ் பதவி ஏற்ற பிறகே காங்கிரஸ் கமிட்டிகளும், இதரர்களும் வேலையில் சுணக்கம்கொண்டு விட்டார்கள். பிரசார வேலை நின்றே போய் விட்டது. சர்க்கார்தான் நம்முடையதாயிற்றே என்று அதிகாரமயக்கத்தில் காங்கிரஸ் இயக்கம் சட்ட சபைக்கு வெளியே படுத்துப் போய் விட்டது.

இந்த நிலைமையில் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஆரம்பமாகி விஷமம் செய்ய ஆரம்பித்தது. இப்பொழுது விற்பனை வரி மற்றொரு பலமாகிவிட்டது. காங்கிரஸ் எதிரிகளுக்கு, வெறும்வாயை மெல்லுகிறவர்களுக்கு, அவல் கிடைத்தால்?

சென்ற சனிக்கிழமையன்று கடற்கரையில் நடந்த கூட்டம் காங்கிரஸ் எதிரிகள் செய்யும் வேலைக்கு ஒரு அத்தாட்சி. முதலில் விற்பனை வரியை எதிர்த்த வர்த்தகர் கூட்டம் அதை எதிர்க்கும் கொள்வினையார் கூட்டமாக மாறிற்று. பிறகு ஹிந்தி எதிர்ப்புக் கூட்டமாக மாறிற்று. விற்பனை வரியும் ஹிந்தி எதிர்ப்பும் ஒரு கூட்டத்தில்! வேறு வினை வேண்டுமா? பொதுமக்களின் மனது கெடுவதற்கு இந்த மாதிரி விஷம வேலைகள் போதாதா? வகுப்புப்பூசல் வேறு விற்பனை வரியில் நுழைக்கப் படுகிறது.

காங்கிரஸ் தொண்டர்கள் என்ன செய்கிறார்கள்? காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள் என்ன செய்கிறார்கள்? தொழிலாளர் துயரங்களைத் தலைகொடுத்துத் தாங்கும் அபேதவாதிகள் இப்பொழுது என்ன செய்கிறார்கள்? சட்டசபை அங்கத்தினர்கள் என்ன செய்கிறார்கள்?

விஷம் தலைக்கேறுவதற்கு முன் காங்கிரஸ்காரர்கள் சரியானபடி பிரசாரம் நடத்தி இடைஞ்சலை முளையிலேயே கிள்ளி எறிவது மிகவும் நல்லது. காங்கிரஸ்காரர்கள் காங்கிரஸ் தடபுடல்களில் கவனம் செலுத்திக் கொண்டு இருந்தபொழுது அவர்களுடைய எதிரிகள் ஆமைபோல நகர்ந்து முன்னேறி விட்டார்கள். முயல் தூங்கி விட்டது. இப்பொழுதாவது விழித்துக்கொண்டு பொது மக்களிடையே மீண்டும் தன் செல்வாக்கை நிலைநிறுத்த வேண்டும். தும்பை விட்டு வாலைப் பிடிப்பது சரியான காரியமல்ல.

## கார்ப்பொரேஷன் கடமை

சென்னை நகரத்திலுள்ள பிச்சைக்காரர்கள் விஷயத்தில் உடனே கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை நாம் பல தடவை கார்ப்பொரேஷன் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். பிச்சைக்காரர்களிலும் வியாதியஸ்தர்களான பிச்சைக்காரர்கள் தான் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியவர்கள். கொடிய ரோகிகளான பல பிச்சைக்காரர்கள் பஸ் ஸ்டாண்டுக்கருகிலும் மற்றும் பல முக்கிய இடங்களிலும் தாராளமாக வசித்து வருகிறார்கள். இப்படி இவர்களை விட்டுவைத்திருப்பது பார்க்க முடியாத கோரக் காட்சியாக இருக்கிறது என்பது ஒரு புறமிருக்கட்டும்; இதனால் ஜனங்களின் தேக நலன் மிகவும் பாதிக்கப்படுமென்பதை மீண்டும் அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம். இந்த நோயாளிகளை உடனே ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்ப வேண்டும். துர்ப்பாக்கிய வசமாய் அவர்களை சொஸ்தப்படுத்த முடியாவிட்டால் அவர்களை தனியாக ஓரிடத்தில் வைத்திருக்கவேண்டும். தனி விடுதி ஏற்படுத்தி இவர்களை அப்புறப் படுத்துவதற்கு அதிகச் செலவு ஆகிவிட்டது. செலவைப் பார்த்துத் தீர்மானிக்கக் கூடிய விஷயமா இது?

பிச்சைக்காரர்கள் தொகை நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது. வீட்டுக்குள்கூட பிச்சைக்காரர்கள் வந்து தொந்தரவு செய்ய ஆரம்பித்து விட்டார்கள். தான தருமங்களில் நமக்கு நம்பிக்கை இருந்தால்கூட, இந்தப் பிரச்னையை இப்படி விட்டுவைக்கக் கூடாது.

ஓர் அநாதை ஆச்ரமத்தை ஆரம்பித்து வேலை செய்யக் சக்தியற்ற பிச்சைக்காரர்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும். மற்றவர்களுக்குத் தகுந்த வேலையைக் கொடுக்க வேண்டும். கார்ப்பொரேஷன் இவ்விஷயத்தில் வேலைசெய்ய எவ்வளவோ இடமிருக்கிறது. இவற்றையெல்லாம் அதிகாரிகள் ஆராய்ந்து ஓர் முடிவுக்கு வருவார்கள் என்று நம்புகிறோம்.

# போகிற போக்கில்



"சாந்தமும், தன்மையும், பெருமையும், விசால மனப்பாங்கும், உண்மையும், பிறரை ஆதரிக்கும் சுபாவமும் உள்ளவர்களல்லவோ அந்தந்தத் தொழிலில் முன்னேற்றமடைய வேண்டும்? அப்பொழுது தானே நாட்டிற்கு க்ஷேமம். வாழ்விற்கு உயர்வும், உயிரும்?" என்று சென்ற வாரம் வேதாந்தச் சுவையுடன் சோகரஸத்தைக் கலந்து என் "போகிற போக்கிலே" முடித்தேன்.

நண்பர்களே, இந்த மனோபாவம், மனோ ஏக்கம் சுமார் 25 வருஷ காலமாக என்னிடம் குடிகொண்டு நிற்கிறது. குடிசையில் காலடி வைத்தாலும் சரி, அரண்மனைக்குப் போனாலும் சரி, இந்த ஞாபகம் என்னை என் சாயல்போல் பின் தொடருகிறது. பாலைவனத்தில் பிரயாணம் செய்பவன் பசும் புல் தரையும் தண்ணீரும் பேரீச்சை நிழலும் எங்கு தோன்றுமென்று ஊக்கப்படுவதுபோல என்றும் சொல்லாம்.

* * *

நான் காலேஜில் வாசிக்கும் பொழுது, வெள்ளைக்காரர்களின் சிநேகத்தை மிகவும் பாராட்டி வந்தேன்—அதன் சேஷம் இப்பொழுதும் தயங்கி நின்றுகொண்டு வருகிறது. ஆங்கிலேயரிடத்தில் எவரும் மெச்சத்தக்க பல குணங்களிருக்கின்றன. அரசாட்சி ஏரில் பூட்டப்படாமல் அவர்கள் வீட்டில் தனி வாழ்வில் நிற்கும் பொழுது அவர்களின் மனப்பாங்கும், போக்கும், விசாலமும், எப்படி உதவி அளிக்கலாமென்கிற புத்தியும், அதற்கொத்த குணங்களும் வெகு சிறந்தவை. அதுவும் ஆங்கில ஆசிரியர்களென்றால் என் பால்ய மோகத்திற்குக் கேட்கவும் வேண்டுமா? விளம்பரத்தில் பிறந்த புகழல்லவோ இவ்வுலகம் முழுவதும் பேய்போல் துளாவுகிறது.

நான் பி. ஏ. ஆனர்ஸ் (இங்கிலீஷ்) படிக்கும் பொழுது—அதாவது பிரஸிடென்ஸி காலேஜிலிருந்து கடற்காற்றை உல்லாஸமாய் வாங்கும்பொழுது — "லண்டன் டைம்ஸ்" பத்திரிகையைச்சேர்ந்த பிரசித்தி பெற்ற அன்னிய நாட்டுப் பகுதி ஆசிரியரொருவர் அப்பத்திரிகையின் விசேஷ நிருபராக நமது தேசத்திற்கு வந்து கவர்னர் வீட்டில் தங்கியிருந்தார். அவர் பிரபல எழுத்தாளர். உட்கார்ந்த இடத்திலிருந்தே அரசியல் நடவடிக்கைகளையும் மனிதர்களின் போக்குவரத்தையும் நன்கு அறியக்கூடியவர். கூர்மையான புத்தியுள்ளவர்; அவரைக் கண்டேன். இளைஞன் ஆகையால் படாடோபமாய்ப் பேசி அவர் நட்பை அடைந்தேன். அவர் அடிக்கடி எனக்குச் சொல்வார். "உன் தேசத்தில் பல புத்திமான்கள் இருந்தும் ஏன் தேசத்தின் அடிமைத்தனம் தொலையவில்லையென்று உனக்குத் தெரியுமா? அதற்கு ஒரே ஒரு காரணம்தான். ஒற்றுமையில்லையென்பது ஓர் அடையாளந்தானே? உண்மைக் காரணம்? வேற்றுமைக்கு உண்மைக் காரணத்தை தெரிந்து கொண்டால்தானே அதை வெல்லலாம்? வேற்றுமையைக் கைகூட்டி ஒன்றுசேர்த்துக்கொண்டுவரக் கூடிய தலைவர்களை இளம்வயதில் பாதுகாக்கும் நாத்தங்கால் உங்கள் ஊரில் கிடையாது. ஆகையால் விளைவு குறைவு. அவரவர்கள் பாடுபட்டு அலித்துச் சலுத்து முன்னேற்றமடைய வேண்டியிருக்கிறது. பார்ப்போம். ஒருவரே மண்வெட்டி, மண் துகைத்து கல் அறுத்து, காளவாய் போட்டு, சுட்டு, கொத்தும் தச்சும் தானே செய்து வீடு கட்டினால் எவ்வளவு காலமாகும்? நன்றாய் அமையுமா? அப்படியேதான் அரசியலும்.

"அணுவான சிறுவர்களை சரியான காலத்தில் பொறுக்கிக் கைதூக்கிவிடும்

விசால புத்தி உங்கள் தலைவர்கள், பெரியோர்களெல்லோருக்கும் தீர்மானமாயில்லை. குருவிற்கு சிஷ்யன் கிடையாது. சிஷ்யனுக்கு குரு கிடையாது. அடித்துப் பிடித்துத் தானே பாடுபட்ட சிஷ்யன் குருவாகும்பொழுது அவன் தலை நரைத்துப் போய்விடுகிறது. வலிவு குன்றிவிடுகிறது. வாழ்வில் புளிப்புத் தட்டிப் போய்விடுகிறது. |சென்ற கஷ்ட காலத்தையே நினைத்து அவரும் சிறுவர்களை பரிபக்குவ காலத்தில் கைதூக்கி விடாமல் கொட்டாவி விட்டுவிடுகிறார். ஆகையால் தான் நாட்டில் செல்வம் உற்பத்தி செய்யும் சக்திக்கும் சேர்க்கைக்கும் குறைவு ஏற்பட்டு விடுகிறது. இந்த மனப்பாங்கை உன்னைப்போலொத்த சிறுவர்கள் தலைவர்களாகும்பொழுது மாற்றினால் நாட்டிற்கு க்ஷேமமுண்டு, ஐயமில்லை. உதார புத்தியைத் தலைவர்கள் சிறுவர்களிடம் காட்டி பரிபக்குவ காலத்தில் அவர்களை முன்னுக்குக் கொண்டுவந்தால் அவர்கள் தொண்டு சிறப்பாயிருக்கும். பயனளிக்கும். தானும் தன் காலத்தில் ஒரு பத்தி தென்னம் பிள்ளை வைத்து பயிராக்கினவர்களாவார்கள். தோட்டம் அழியாது. நாகரீகம் வளரும்; அரசியல் மேன்மைப் படும்."

இந்த மொழிகளை நான் அது முதற் கொண்டு மறந்ததேயில்லை. தமிழ்நாட்டு வாழ்வை, பழக்கவழக்கத்தை, எந்த வழியில் சோதித்துப் பார்த்தாலும் இந்த விசால புத்தியால்தான் ஒற்றுமையும் செல்வப்பெருக்கும் ஏற்படுமென்று தோன்றுகிறது. அன்பு பிறப்பதற்கே விசாலபுத்தி முதற்காரணமல்லவா? ஆகையால் நமது அரசியல் தலைவர்கள் எந்த பதவிகளுக்கும் தக்க வாலிபர்களைப் பொருக்கியெடுத்து 'ஸபாஷ்' கொட்டிப் பழக்கி அவர்களை தேசத் தொண்டில் போட்டு முன்னேற்றமடையும்படியாய் முயலவேண்டும்.

இந்தக்கட்டுரையை நான் மூச்சுவிடாமல் நீங்கள் அலுக்கும்வரையில் ஹனுமார் வால் போல் நீட்டி நீட்டி எழுதலாம். இது விஷயத்தில் எனக்கு அவ்வளவு மனோ வேகம் இருக்கிறது. ஆனால் சென்டரல் ஸ்டேஷன் போகும் பஸ் எனக்காகக் காத்துக் கூவிக்கொண்டு நிற்கிறது. ஸ்டேஷனிலோ பாம்பே எக்ஸ்பிரஸும் 'புல் ஸ்டீமுடன்' காத்துக்கொண்டு நிற்கிறது. நான் ஓடிப்போய்ப் பார்த்து அடுத்த வாரத்தில் முன்போல் என்ஜின் பெயரென்னவென்று சொல்லுகிறேன். லார்ட் டெல்ஹௌஸியோ, கர்ஸானோ இஞ்சின் பெயராயிருக்கலாம். ஒருவேளை லார்ட் லின்லித்கோவென்றுமிருக்கலாமோ—— நான் டில்லிக்குப் போகிறவனாயிருக்கிறேனே!

—மணி

---

## ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

# வார நடப்பு

திரிபுரி காங்கிரஸ் கூட்டத்திற்குப் பிறகு, தலைவர் சுபாஷ் சந்திரபோஸ் தேக அசௌக்கியத்தினால், காங்கிரஸ் அலுவல்கள் மந்தமாக இருக்கின்றன. சுபாஷ் பாபு காந்திஜியை நேரில் கண்டு பல விஷயங்களைப் பேசிய பிறகு காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

டெல்லியில் ஸ்ரீ நேரு காந்திஜியைச் சந்தித்து சில முக்கியமான பிரச்னைகளை வாதித்ததாக செய்திகள் கூறுகின்றன. தேச ஜனங்களின் மதிப்பைப் பெற்ற எல்லாத் தலைவர்களும் காரியக் கமிட்டியில் இடம் பெறு பெறுவார்கள் என்று நம்ப இடமிருக்கிறது.

சென்ற புதன்கிழமை மஹாத்மா காந்தி வைஸ்ராயைச் சந்தித்து ராஜ்கோட் சம்பந்தமாக சுமார் 2 மணிநேரம் பேசினார். வியாழனன்றும் மறுபடியும் காந்தி வைஸ்ராய் சந்திப்பு நேர்ந்தது. முக்கியமாக சமஷ்டி நீதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும் மனுவைப்பற்றி விவாதம் நடந்தது. ஸமஸ்தானத்தில் அமைக்கப்படும் சீர்திருத்தக் கமிட்டியின் அங்கத்தினர்கள் ஸர்தார் படேல் சிபார்சு செய்தவர்களையேதான் தாகூர் ஸாஹிப் நியமிக்கவேண்டுமா அல்லது படேலால் சிபார்சு செய்யப்பட்ட நபர்களில் சிலரை மாத்திரம் தேர்ந்தெடுத்துக்கொண்டு தன்னிஷ்டப்படி வேறு சிலரை நியமிக்கலாமா என்பது தான் பிரச்னை. இது சம்பந்தமாக நீதிபதிக்கு அனுப்பும் யாதாஸ்தைப்பற்றி காந்திஜியின் இஷ்டத்துக்கு அனுகுணமாகத்தான் முடிவுக்கு வந்ததாகத் தெரிகிறது. இந்த ராஜ்கோட் விஷயம் தீர்மானமாகி முடிகிறவரையில் காந்திஜி டில்லியைவிட்டு நகரமாட்டாரென்று தெரிகிறது.

லாகூர் சீப்ஸ் கலாசாலையில் பேசும்பொழுது, பஞ்சாப் கவர்னர் சமஸ்தானாதிபதிகளுக்கு ஒரு எச்சரிக்கை கொடுத்தார். தங்களிடத்தில் இருக்கும் அதிகாரத்தை மன்னர்கள் துர்வினியோகம் செய்யக்கூடாது என்பதை வற்புறுத்தினார்.

திருவாங்கூர் திவான் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் போலீஸ் கூட்டத்தின் போது நடத்திய சொற்பொழிவுக்கு மகாத்மா காந்தி ஆணித்தரமான பதில் அளித்திருக்கிறார். ஜனங்களின் நன்மைக்காகவே தான் சர்க்கார் பாடுபடவேண்டும் என்று விளக்கிக் கூறினார். திவான் காங்கிரஸை வசைச் சொற்கள் உபயோகித்துத் தூஷித்ததற்காக, அவரை காந்திஜீ கண்டித்துப் பதில் அளித்திருக்கிறார். திவான் இதற்கு என்ன பதில் சொல்லுவாரோ?

திருவாங்கூர் பொறுப்பாட்சிப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவர்கள் சமஸ்தானத்தின் அமைதியைக் காப்பதற்காகக் கைதியாக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஐரோப்பிய நிலைமை வரவர நெருக்கடி ஆகிக்கொண்டு வருகிறது. ஹிட்லர் தன் இஷ்டப்படி செக்கோஸ்லோவாகியாவை பக்ஷித்துவிட்டார். நடந்த மூனிச் ஒப்பந்தத்தாலே அதை ஆகாரத்துக்குப் பக்குவப்படுத்தி வைத்தார். அதற்குத் துணையாக இருந்த வல்லரசுகளை அப்போது பாராட்டினர். அதற்கு பிரிட்டிஷ் பிரதம மந்திரி கோபத்தால் எகிறிக் கூடக் குதிக்கிறாராம். சென்ற செப்டம்பரில் ஏன் ஹிட்லருடன் சேர்ந்து செக்கோவை பக்ஷணமாகச் செய்யவேண்டும்? இப்போது ஏன் ஹிட்லர்பேரில் தப்புக் கண்டுபிடிக்க வேண்டும்? அப்போதே தூரதிருஷ்டிகளான பத்திரிகாசிரியர்கள் சொல்லவில்லையா?

தலைவர் ரூஸ்வெல்ட் கூட ஹிட்லர் அநியாய முறையைக் கையாளுகிறார் என்று எடுத்துக்கூறுகிறார்.

இந்த அநீதியைக் கண்டிக்க, ஜனநாயகத்தை ஆபத்தினின்றும் நீக்க, உலகத்திலுள்ள எல்லா ஜனநாயக அரசாங்கங்களின் பிரதி நிதிகளும் ஒன்று கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வருவார்களாம், இந்த முடிவு எப்படி இருக்குமோ?

தன்னைப்பற்றி உலகெங்கும் நடக்கும் தடபுடல்களை எல்லாம், ஹிட்லர் கொஞ்சம்கூட மதிக்கவே இல்லை. அவர் ஏதேச்சையாகத்தான் ஏதேச்சாதிகாரத்தை வகிக்கிறார். பிரிட்டன் அவருடைய நடத்தையைக் கண்டித்ததை, அவர் காரணமற்றது என்று ஒரே வார்த்தையில் தள்ளிவிட்டார்.

# முருகன் சந்தேகம்

"சிட்டி"

பாரதமணி போடறவங்களுக்கு,

என் ஐயா, போன வாரம் காங்கிரசு நடந்திச்சே அதுக்கு யாரு பெரியவரு? ராட்ரபதின்னு சொல்றுங்களே, அவரைத் தான் கேக்கறேன். சுபாஷ் சந்திரபோஸ் தான் ராட்ரபதின்னு சொல்லிகிட்டாங்களே, அவருக்குத் தான் உடம்புக்கு வந்திடுச்சாம். பாவம் சண்டைபோட்டு ஜெயிச்சாராமே ராட்ரபதிங்கர பேரை. அவரு இல்லேங்காதினாலே அசாத்துப் பெரியவரு தான் தலைவராக இருந்தாராம். இவரு தான் எனக்கு ராட்ரபதி வேணுமன்னு போனாரே, இப்படியா இவரைப் பிடிச்சு இழுத்துகிட்டுவந்து உட்கார வைக்கணும்? கமிட்டியிலே கூட நம்பராயிருக்கமாட்டேன்னு சொன்னாராமே. சுபாஷ் போஸ் ராட்ரபதி ஆகக் கூடாதுன்னு எல்லோரும் நினைச்சாங்கன்னு படேல் சொன்னாராம். நான் அதை நம்பலே. காந்தி கூட நெனச்சாராம். அப்பா, அந்த காந்தி நெனச்சா கடவுள் நெனக்கிராப்பிலேதாஞ் சாமி இருக்கு. போஸையா தான் ஓட்டு வாங்கிக்கிட்டு வந்தாரே ஒரு நாளாவது காங்கிரசிலே உக்காரக் குடுத்து வச்சாரா! காந்தி சொன்னதெக் கேக்காட்டி அப்பிடித் தான்.

அது போவட்டும். அசாத்துப் பெரியவருக்கும் அந்த கதி தானே? அவரெ ராட்ரபதியாயிருன்னு சொன்னா இருக்கமாட்டமுன்னு ஓடினாரே. இப்பொ காங்கிரசுலே உக்காந்து நிசம் ராட்ரபதியாயிருக்கல்லே? மருவாதையா மொதல்லெயே ஓடாமெ இருந்திருக்கலாமில்லெ!

ஆமய்யா, அவருதான் ராட்ரபதின்னு உக்காந்தாரே, அவரு தானே கூட்டத்தெ நடத்தணும். இந்த நேரு வந்து நின்னுகிட்டு சத்தம் போட்டு சிப்பாய் கணக்கா காங்கரசு நடத்தினாராமே. இவரு தானே இனி ராட்ரபதியா இருக்கவே மாட்டேன், எனக்கு தலைவரு உத்தியோகமே வேண்டாமுன்னு சொன்னவரு. இப்பொ அசாத்துக்குமேலெ ராட்ரபதி மாதிரி நடத்தினாரே. எல்லா தீர்மானத்துக்கும் இவரு தான் பேசினாராமே. வங்காளத்திலேருந்து வந்த காலிக் கூட்டத்து வாலை ஒட்ட அறுத்துட்டாராமே. இவருக்குமா இப்படி நினைச்சதுக்கு விரோதமா நடக்கணும்? இவங்க ஒண்ணு நினைக்க காந்தி ஒண்ணு நினைக்கிறாரே, இவுங்க மந்திரம் பலிக்குமா?

ஆமாங்க, காங்கிரசு வேறெ ஊர்லெ நடந்ததாமே. காந்திகூட வரல்லையாம். ஆனா எல்லாத்துக்கும் காந்தியோடெ தந்தி பேசியே நடத்தினாங்களாமே. நான்கூட காரூவா குடுத்திருக்கிறேன் காங்கிரசுக்கு. இந்த காந்தி அதுகூட குடுக்கல்லியாம். அவரையே எதுக்குங் கேட்டாங்களாமே. அவருதான் சாப்பாடுகூட இல்லாமெ இருந்தாராமே. நான் ஒண்ணு சொல்றேனுங்க. நானும் எத்தனையோ நாள் ராப்பட்டினி பகல்பட்டினி இருந்திருக்கேன். (எங்கே, மழையில்லே ஒண்ணுமில்லே. யாரு சோறுபோட்றாங்க) பிச்சையா எடுக்கிறது? நான் பட்டினியிருந்தா ஒருத்தரும் என்னு கூட கேக்கமாட்டாங்கன்னு நினைச்சேன். அந்தமவராசன் காந்தி இருந்த பட்டினி எங்க பட்டினி. அதனாலெ இல்லை, வைசிராய் துரைகூட ஊருக்குத் திரும்பிவிட்டாராம்.

ஆமாங்க, என் சந்தேகத்தைத் தீக்கமாட்டிங்களா? காங்கரசுக்கு நிசம்மா ராட்ரபதி யாரு? போஸையாவா அசாத்துப் பெரியவரா? நேரு சிப்பாயா? இல்லாட்டிப்போனா எலட்ரி விளக்கு ஸ்விச்சுமாதிரி வேறெ எங்கேயோ உக்காந்திருக்காரே அந்த காந்தி கிழவரா? இல்லாட்டி காங்கிரசுக்கு நாலு ராட்ரபதியா? அதுக்குப்

(731-ம் பக்கம் பார்க்க)




# மிருக சிகிச்சை

(ஸ்ரீ. எஸ். ராமஸ்வாமி)

பகுத்தறிவில்லாத ஜந்துக்களில் பசுவை நாம் தெய்வமாகக் கொண்டாடுகிறோம். அதிக சிரேஷ்டமான சிருஷ்டியாகக் கருதுகிறோம். நாயையும் மிக நன்றியுள்ள பிராணியாகப் பாராட்டுகிறோம். மற்ற மிருகங்களோடு இவைகளையும் பகுத்தறிவில்லாத ஜந்துக்களாகக் கருதுகிறோம். ஆயினும், பசுவும் நாயும் இயற்கையாய் நடந்து கொள்ளும் விதத்திலிருந்து பகுத்தறிவு என்ற ராஜ்யத்தின் எல்லையை எட்டிப் பார்க்கின்றன என்று சொல்வது மிகையாகாது. தனது, தனக்கு உறித்தானது என்பது எப்படி ஏற்படும்? அன்பு, நேசம், நன்றியறிதல் இவை பகுத்தறிவின்றி எப்படி நாய்க்கு ஏற்பட்டது?

அன்பை வேண்டுமானால் சேர்க்க வேண்டாம். ஏனெனில் அது அதி உத்கிருஷ்டமான குணமாய்க் கருதப்படுவதுமல்லாமல், அன்பே அருளென்றும் கருதப்படுகிறது.

தன் கன்றைத் தூக்க வருபவனை முட்டித் தூக்கி எறியும் பசுக்களை நாம் பார்க்கிறோம். தம் எஜமானனைக் காப்பாற்றத் தம் உயிரைக் கொடுத்த நாய்களின் சரித்திரம் நமக்குத் தெரியாததல்ல. ஆகையால் மிருகங்களுக்குப் பகுத்தறிவே இல்லை என்று சொல்லுவதை நாம் முழுதும் நம்பக் கூடாமலிருக்கிறது. ஆனால் இவை பேசும் திறனற்றவையானபடியால் அவைகளின் பகுத்தறிவை நாம் கண்டு கொள்ளவேண்டியதே ஒழிய சொல்லக் கேட்க முடியாது. இவைகளுக்குப் பேசுந்திறன் இருந்தால், பகுத்தறிவில் நமக்கும் அவைகளுக்கும் உள்ள பேதம் விளங்கும்.

நம்மைக் காட்டிலும் தாழ்ந்த ஸ்திதியில் இருப்பவனைப் பார்த்து நாம் ஒருபொழுதும் திருப்தி அடைவதில்லை. நமக்கு மேல் உயர்ந்த அந்தஸ்துள்ளவனின் சௌக்கியங்களைப் பார்த்துப் பொருமை அடைந்து கடவுளை நொந்துகொள்வது தான் பகுத்தறிவுள்ள நமக்கு சகஜம். இந்தப் பொருமைக் குணம் மாடுகளினிடம் கிடையாது. தன் வயிறு நிறையும் வரையிலே அதற்குக் கவலை. மற்றொன்று பருத்திக் கொட்டையும், நல்ல புண்ணாக்கும் புல்லும் தின்றுகொண்டிருக்கிறதே என்ற கவலை அதற்குக் கிடையாது. தட்டோ, காய்ந்த புல்லோ கிடைத்து வயிறு நிறைந்தால் போதும். மேலும் வயிறாறத் தின்று அசை போட்டுக் கொண்டிருக்கும் ஒரு மாட்டின் முன் எந்த ருசிகரமான உயர்ந்த உணவைப் போட்டாலும் சீந்தாது. இந்த விஷயத்தில் நம்மைவிட மிருகங்களே மேலானவை. நாம் மத்தியானம் விருந்துண்டு, இராப்போசனம் தேவை இல்லை, ஒரு டம்ளர் வெந்நீரோ, பாலோ குடித்துவிட்டுப் படுத்துக் கொள்வோமென்று உத்தேசித்திருப்போம். அன்றுதான் ராத்திரி வீட்டில் வெகு ருசிகரமான உண்டி தயாரித்திருப்பார்கள். தயாரித்த நமது சம்சாரத்தின் கோபத்திற்குப் பயந்தோ, நமது நாவின் ஆசையை அடக்க இயலாமலோ, ராத்திரியும் போஜனம் செய்து, மறுநாள் மலச்சிக்கல், அஜீரணம், ஜுரம், தலைவலி முதலான கஷ்டங்களை அனுபவிக்கிறோம். இதை உத்தேசித்தால் நமக்கும் பகுத்தறிவு இல்லாமலே இருக்கவில்லையே என்றுகூடத் தோன்றும். மாடுகள் நம்மைப் போல் பத்திய விஷயத்தில் டாக்டர்களுக்கு சிரமம் கொடுப்பதில்லை. நோக்காடு வந்தவுடன் ஆகா

ரத்தை நிறுத்திவிடும். ஆகாரத்தை நிறுத்துவதே அதற்கு ஒரு முக்கியமான அடையாளமாகவே கருதப்படுகிறது.

பகுத்தறிவாலும், புலனுணர்ச்சியாலும் மேன்மையடைந்த நம்மில் பெரும்பான்மையோர், ஆசாபாசங்களுக்கு அடிமையாகி, தனத்தையே தெய்வமாகக் கருதி, சிற்றின்பத்தையே பேரின்பமாக மதித்து தேக ஆரோக்கியத்தை இழந்து சஞ்சரிக்கிறார்கள். பகுத்தறிவில்லாத பசுவோ தன் பக்குவ காலத்தில் ஒரு காளையைச் சேர்ந்தபிறகு மற்றொரு காளையை அருகே அணுக விடாது. கர்ப்பந்தரித்த பசுவின் பக்கம் காளை அண்ட முடியாது. நம்மிலோ இந்த விஷயத்தைப் பற்றிப் பேசாதவரை நமது பகுத்தறிவின் மேன்மைக்குப் பங்கமில்லை.

வியாதியோடிருக்கும் மாடு தன் தேக ஸ்திதிக்குத் தக்கவாறு எந்த விதம் படுத்திருக்கவேண்டுமோ, எந்த விதம் நின்றுகொண்டிருக்க வேண்டுமோ, அப்படித் தானாகச் செய்துகொள்ளும். நாலு கால்களையும் நீட்டிப் படுத்துக்கொள்ள வேண்டிய சமயத்தில் அப்படியே செய்யும். தேகத்தில் உஷ்ணம் ஜாஸ்தியான போது வேகமாயும் அள்ளைகளைத் தூக்கிப் போட்டும் மூச்சுவிடும். மார்புக் கூட்டில் உள்ள காற்றுப் பைகள் கெட்டுப் போய் மூச்சுவிடத் திணறும்போது, தன் முன் கால்களில் தேகத்தோடு ஒட்டி நிற்கும் பாகத்தை மார்புக் கூட்டின் மேல் அழுந்த விடாமல் விலகிக்கொண்டு நிற்கும். படுக்காது. மாடு படுக்கவே மாட்டேன் என்கிறது, திக்குத் திக்கென்று மூச்சு விடுகிறது என்று பயப்படக் கூடாது. இயற்கையாய் மாடுகள் எப்படி நடந்துகொள்ளு மென்பது தெரியாமல் வீண் பீதி கொண்டு, பிறர் சொல்வதையெல்லாம் செய்து கொண்டு கஷ்டப்படுவது, நாம் பசுக்களைக் கவனித்து அவைகளின் சுபாவங்களைத் தெரிந்து கொள்ளவில்லை என்பதை விளக்குகிறதே யன்றி வேறொன்றுமில்லை.

---

(729-ம் பக்கத் தொடர்ச்சி)

பேருதானுங்களே சனநாயக்கம். போன மாசம் வந்தாரே ஒரு ஸோக்ஷ.. ... என்னமோ தொழிலாளர் வாதியாமே. அவரு சொன்னாரு. ஒருத்தர் சொல்றபடி கேக்கக்கூடாதாம். சனநாயக்கர் சொல்றபடிதான் கேக்கணுமாம்.

இன்னொரு சந்தேமுங்க. காந்தி பட்டினி இருந்தாரே அந்த ஊருக்கு ராஜா தாகூர்ன்னு சொல்ராங்களே. பாட்டு கீட்டு எல்லாம் எழுதிருக்காராம். அந்த வங்காள தாகூர்தானே. எங்க ஊரு முதலியாரு மகன் காலேஜிலே படிக்கிறாரே அவரு அப்படி இல்லென்னு சொன்னாரு. ஆனா பாட்டு எழுதின தாகூர் ஏன் காந்தி பட்டினி இருந்தா நம்ப சந்தோசமா யிருக்கனும்னு சொன்னாரு. மழை, குளிர், கஷ்டம் போனா வசந்த காலம் வருதாம். என்னமோ புரியாததெல்லாம் பேசினாரே. எப்படியாவது போகட்டும் பாட்டு எழுதட்டும் கூத்தாடட்டும். காந்தி பட்டினி இவருக்கு ரகளையா யிருக்குதோ? இந்த வங்காளிகள் புத்தியே இப்படித்தானா ஐயா? காந்தி பட்டினி இருக்கிறபோது வசந்தகாலம் வந்தா என்ன, வில்வெட்டுக் குல்லா வந்தா என்ன. இந்தப் பாட்டுக்காரங்களுக்கு இந்த வம்பு எதுக்குங்கரேன்? இவுங்களை யாருனாச்சும் கூப்பிட்டாங்களா?

அந்த மாதிரி இன்னொரு பெரியாம்பிளை இருக்காரே அடையாத்துலே. பட்டுச் சட்டை வில்வெட்டு செருப்பு எல்லாம் போட்டுக்கிட்டு பிரம்மஞானம் விக்கிறாருமுங்கிராங்களே, அவுங்க ஐயாவாம் அருண்டேலோ உருண்டேலோ. வேணுமுன்னா பத்து தரம் திங்கட்டுமே. காந்தி பட்டினிக்கு இவரை யாரு உத்தரவு கேட்டாங்க? இவரெக் கேட்டா உலகம் உருளுது. காந்தியெப்பத்திப் பேச இவருக்கென்ன வாயின்னு கேக்கிறேன். ஒரு நாள் இவரு சாப்பிடாமெ இருக்கட்டும் பார்க்கிறேன். பிரம்ம ஞானம் மலையேறிப்போயிடும். என்னமோ ஐயா, இதெல்லாம் எனக்கு சந்தேகமா யிருந்திச்சு. இப்போதான் வேலையில்லையா, மழை கிளை கிடையாதே. இப்படி வரப்புலே குந்திகிட்டு நினைச்சிகிட்டே இருந்தேன். உங்களுக்கு எழுதலாம்னு நெனச்சேன். என்ன சொல்றீங்க?

குடியான முருகன்.

# பழைய கிராம சபைகள்

("புராணிகன்")

தென் இந்தியாவில், தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் இவை பேசப்படும் எல்லாப்பிரதேசங்களிலும், பல்லவராயர்கள் நாள் முதல், கிராமங்களும், நகரங்களும் ஜனங்கள் சுய ஆட்சியில் இருந்து வந்தன என்பது அநேகர்களுக்குத்தெரிந்த விஷயமல்ல. நகரங்களிலும், கிராமங்களிலும், ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் சபையாகக்கூடி, நேரிலும், வாரியம் (Committes) நியமித்தும் பொதுக் காரியங்களை நடத்தி வந்தார்கள். நிலவரி வசூல், சுகாதாரம், விவசாய காரியங்கள், கோவில்கள், கல்லூரிகள், காவல், வியவஹார நிர்ணயம் முதலிய காரியங்களை ஜனங்களே பார்த்து வந்தார்கள். கிராம நகரங்களுக்கு ராஜாக்களும், இதர சீமான்களும், பணம் நிலம், முதலியவற்றை இனமாகக் கொடுத்தார்கள். அவைகளைக் கொண்டு சபைகள் காரிய நிர்வாகம் செய்து வந்தன. இந்த விஷயங்கள் எல்லாம் வெகு காலமாக சென்னை சர்க்காரில் பிரசுரிக்கப்பட்ட சிலாசாஸனங்களிலிருந்தும், இன்னும் இதர தஸ்தாவேஜிகளிலிருந்தும் நன்றாய்த் தெரிய வருகிறது.

கிராம சபைகள் மூன்றுவகையானவை. பிராமண கிராமங்களுக்கு சபை என்றும், அப்பிராமண கிராமங்களுக்கு ஊரோம் என்றும், நகரங்களுக்கு நகரத்தார் என்றும் பெயர் விளங்கியது. சபைகளில் ¼ வேலியும் ஒரு வீடு மிருந்தவர்கள் உட்கார பாத்தியம் உண்டு. சொத்து மிகவும் குறைவாக இருந்தபடியால் அநேகமாய் கிராம வாசி எல்லாரும் சபை அங்கத்தினர்களா யிருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. மேற்படி சபைகள் அடிக்கடி கூட்டம் கூடி விவாதம் செய்வார்கள். அவர்கள் பகல் இராத்திரி இடைவிடாமல் கூடினர்கள் என்றும் சில சிலாசாஸனங்களிலிருந்து தெரிகிறது. மேற்படி சபைகள் பொது விஷயங்களை ஆலோசித்தன. வரவு செலவுகளை வருஷம் தோறும் பரிசீலனை செய்தன. மற்றப்படி கிராம காரியங்கள் முழுவதையும் தங்களால் நியமிக்கப்பட்ட வாரியங்கள் மூல்யமாய் செய்தன. முக்கியமானது சம்வத்ஸர வாரியம். அதில் அனுபோகஸ்தர்களும், வயது முதிர்ந்தவர்களும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதர வாரியங்களின் செய்கைகளை வருஷம் முழுவதும் கவனித்து வந்தார்கள். அடுத்தாற்போல் வியவஹார நிர்ணய வாரியம். அது கிராமத்தில் ஏற்படும் வியவஹாரங்களை தீர்மானித்தது. அடுத்தாற்போல் முக்கியமானது குளம் தடாகம் வாரியஙகள். அவை விவசாயத்துக்கு வேண்டிய ஜலத்தை குளங்களில் சேர்த்துக்காப்பாற்றி வந்தன. இன்னும் கிராமக்காவல், சுகாதாரம் முதலியவற்றைக் கவனிக்கவும், கோவில், கல்லூரிகளை மேன்மையாக்கவும் அநேக வாரியங்கள் நியமிக்கப்பட்டன.

வாரியங்கள் நியமன முறையைக்கொண்டது. எல்லா கிராமவாசிகளும் வேலை பார்க்கக்கூடிய ஹோதாவில் ஏற்பட்டிருந்தது. கிராமச் சேரிகள் ஒவ்வொன்றிலும் உள்ளவர்கள் பேரை ஓலைகளில் எழுதி ஒரு குடத்தில் போட்டு ஒவ்வொரு சேரியிலுமிருந்து ஒரு பேரை பொறுக்கி வாரியங்களுக்கு நியமனம் செய்தார்கள். ஒருதரம் வாரியங்களில் உட்கார்ந்தால் பிறகு 3 வருஷங்கள் கழித்துதான் அவர் தேர்ந்தெடுக்கப் படலாம். இதனால் எல்லா கிராமவாசிகளுக்கும் வாரிய காரியம் செய்யும்படி சந்தர்ப்பம் நேரிடும். கிராம நகர காரியங்களைப் பூராவும் ஜனங்களே நேரில் முறை முறையாக செய்து வந்தார்கள்.

மேலேகண்ட சுய ஆட்சியில் ஏற்பட்ட உத்சாகத்தினாலும், பொது நன்மை புத்தியினாலும்தான் திராவிடதேச ஜனங்கள் சோளர், நாயக்கர், முதலியவர்கள் அரசாண்ட நாளில், ஏராளமாய் கல்வி பயின்றும், கோவில் கல்லூரிகள் கட்டியும், படை சேர்த்து தேசத்தை பிறரடிமை யில்லாமல் காப்பாற்றியும் வந்தார்கள். கிராமங்களும் நகரங்களும், நேர்த்தியாயும், நல்ல ஜனவாசத்துடனும், பிணி பசியில்லாமலும், வித்தியா கோஷம் ஆயுத கோஷம் முதலியவை நிரம்பி சௌக்கியமாய்

வாழ்ந்துவந்தன. அவைகளின் வரும்படியையும் செய்கைகளையும், விஸ்தீரணத்தையும் கவனிக்கும் காலத்தில், அவைகளை சின்ன ராஜ்யம் என்றே கூறவேண்டும்.

## வரி வியவசாயம்

நம் நாட்டின் கிராமங்களில் சோளநாயக்கர்கள் நாளில் நிலபாத்தியம் எப்படி இருந்தது, வரிவசூல் விவசாய காரியங்கள் எப்படி நடந்து வந்தது, என்று பார்ப்போம். நம் நாடு பூராவும் ஆதி முதல் நாளது வரையில் நில வரும்படியைக் கொண்டு ஜீவித்திருப்பதால், இந்த விசாரணையிலிருந்து நம் தேசத்து பழைய கிராமங்களுக்கு இருந்த அதிகாரமும், செல்வாக்கும், சுயாட்சியினுல் ஏற்படக் கூடிய பொருத்த லாபங்களும் நன்ருய் வெளிப்படும்.

நம் நாட்டில் பழையநாளில் கிராமப் பொது நிலங்கள் கிராமத்தைச்சேர்ந்தவை; சர்க்காரைச் சேர்ந்ததல்ல. நிலங்களைப் பறிமுதல் செய்ய கிராமங்களுக்குத்தான் பாத்தியம்.

ராஜாவுக்குச் சேரவேண்டிய நிலவரியை கிராமந்தோரும் வசூலிக்கவும் செலுத்தவும் கிராம சபைக்குத்தான் பாத்தியம். —சர்க்கார் சிப்பந்திகளல்ல. வரியை தலா தலா எவ்வளவு கொடுக்க வேண்டியது என்று கிராம சபைகள் விதித்தன. அவைகளைத் தாங்களே வசூல் செய்து ராஜாங்கத்துக்குச் செலுத்தின.

எந்த நிலக்காரராவது வரி கொடுக்காமல் இருந்து விட்டால் அவரது நிலம் முதலியவற்றை கிராம சபையோர் விற்றுப் பறிமுதல் செய்து வசூலித்தார்கள்.

கிராமங்களில் விவசாயத்துக்காக தடாகங்கள், நதிகள், வாய்க்கால்கள் இவைகளைப் பார்த்து சம்ரக்ஷிக்க வேண்டியது மிகவும் அவசியம். தென் இந்தியாவில் காவேரிப் புறமுள்ள சில ஜில்லாக்களைத் தவிர பாக்கி ஜில்லாக்கள் குளம் ஏரிப்பாய்ச்சலில் ஜீவித்து வருகின்றன. ஆகையால் ஏரி குளங்களில் தண்ணீர் சேர்ந்ததும் அதைக் காப்பாற்றியும், பாய்ச்சலுக்கு வாய்க்கால் வெட்ட வேண்டியது நம் நாட்டு கிராமங்களின் முக்கிய வேலை. இவைகள் எல்லாம் நான் சொல்லும் காலங்களில் கிராம சபைகள் நேரிலோ வாரியங்கள் மூலமாகவோ செய்துவந்தன. நம் தேசத்தில் சிலா கிராமத்து சபைகள் எவ்வளவுவைபவத்துடனும், சிறப்பாயும் ஏரி தடாகங்களைக் கவனித்து வந்தார்கள் என்று சாஸனங்களில் நன்ருய் காணப்படுகிறது. செங்கல்பட்டு ஜில்லாவில் வைரமேக தடாகம் என்று பேர் விளங்கின தடாகம் ஒன்று மிகவும் நன்ருய் இருந்து வந்ததில் ஒன்று.

ஏரி தடாகங்கள் சம்ரக்ஷணை, பொது மராமத்து காரியங்கள் இவற்றை கிராம சபைகள் செய்து வந்தார்களே அவர்களுக்கு பணம் ஏது, வரும்படி எப்படி என்று கேட்கலாம். மேற்சொன்ன காரியங்களுக்கு ஏராளமான வருஷாந்தரச் செலவு ஏற்படக்கூடியது.

ராஜாக்கள் தங்களுக்குச் சேரவேண்டிய கிராமவரியில் ஓர் அம்சத்தை கிராமத்துக்கு அளித்தும், மான்யங்கள் முதலியன விட்டும், அநேக தர்மிஷ்டர்கள், ராஜா, மந்திரி சேனுபதி முதலியவர்களால் அடிக்கடி அளிக்கப்பட்ட நிலம் தனம் இவை வரும்படியைக் கொண்டும், கிராமங்கள் தங்கள் காரியங்களைச் செய்து வந்தன. கிராம சபைகளுக்கு கிராமஜனங்கள் பேரில் சில்லறை வரிகள் விதிக்கவும் வசூலிக்கவும் பாத்தியம் உண்டு.

மாசூல், தடாகம், ஏரிகள் இவற்றை ஜனங்களே காவல் பார்த்து வந்தார்கள்.

பிராமண கிராமங்களிலும், அப்பிராமண கிராமங்களிலும், கிராமத்தார்களே சுய சரீரப் பிரயாசையின் பேரில் காரியங்களைப் பார்த்து வந்தார்கள். சம்பள சிப்பந்திகள் மிகவும் குறைவு.

வரி விவசாய வரவு செலவுகள், தடாகம் ஏரி செலவுகள் — இவைகள் எல்லாம் வருஷந்தோரும் கிராமசபைகளே பரிசோதித்துக் கவனித்து வந்தன. வீண் செலவு நஷ்டம் இல்லாமல் பார்த்து வந்தார்கள்.

# முதல் வாயிதா

(ஸ்ரீமதி செல்லம்)

குழித்தலை தாலூகாவில் ஓர் பெரிய கிராமத்தில், மிராசுதார் கோபாலன். அவன் தாய் தந்தைக்கு ஒரே பிள்ளையாகப் பிறந்த தண்டனைக்காக ஐம்பது ஏகர் நிலத்தை பதினாயிர ரூபாய் கடனுடன் தந்தை இறந்ததும் ஒப்புக்கொள்ள நேரிட்டது. ராஜம் ஓர் பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தரின் பெண். கூடியவரையில் குணவதி. புருஷனிடம் மிக்க அன்புடையவள். ஆனாலும் பட்டண வாஸத்தில் சுகமாக வளர்ந்த அவளுக்கு பட்டிக்காட்டு வேலைகளும் பழக்கங்களும் மிகுந்த சிரமத்தை உண்டுபண்ணுமல்லவா?

அவளுக்கு வயது இருப்பத்தி ஏழுக்குள் பதின்மூன்று வயதடைந்த பெண்ணின் கலியாணத்தைப்பற்றிச் சிந்திக்கும்படியான சிரமம்கூடக் காத்திருந்தது. பெண்ணுக்குச் சிறியவர்களாக மூன்று பையன்கள் இருந்தார்கள். கடன் மசோதாவால் வட்டி லாபம் தான். இந்த பதினாயிர ரூபாய் முதலைக் கொடுக்கவேண்டுமே? அது எப்படி? வட்டிக் குறைவால் சீற்றமடைந்து கடன் கொடுத்தவர்கள், தினம் வீட்டில் வந்து பேசாததெல்லாம் பேசினார்கள்.

கோபாலன் தந்தை இறந்து மூன்று வருஷங்கள் ஆயிற்று. இருபது ஏகர் நிலத்தை இருநூறு தடவை விலைக்குப் பேசினான் கோபாலன். பணமிருப்பவர்கள் இவனது முடையைப் பார்த்து ஏழாயிரத்திற்குமேல் சல்லிக் காசும் கொடுக்கச் சம்மதிக்கவில்லை. அதை விற்றும் கடன் மிஞ்சுவதை ராஜம் விரும்பவில்லை. தை பிறந்தாலோ பெண்ணுக்கு வரன் தேட வேண்டும். இன்னமும் கிராமங்களில் வயது வந்த பெண்ணை வைத்துக்கொள்ளும் துணிச்சல் ஏற்படவில்லை.

கோபாலன் வெகு கெட்டிப் பேர்வழி. வெளியில் அலைந்து வெள்ளாமை விளைச்சலைக் கவனிப்பதுடன் நின்று விடுவான். நெல் விற்றுக் கையில் ஒரு ரூபாய் வந்தாலும் ராஜத்தின் கையில் சமர்ப்பித்து விடுவான். வீட்டுச் செலவோ, வட்டி வாசியோ என்ன சிரமமாக விருந்தாலும் அவன் காதில் போடக்கூடாது. அப்படியில்லாமல் ஏதாவது கூறினால், "என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்? கிடைத்ததைத்தான் உன் கையில் கொடுத்துவிட்டேனே!" என்பான். அந்தப் பதிலை கேட்க விரும்பாமல், அவனுகக் கேட்டாலொழிய ராஜமும் வலுவில் ஒன்றும் அவனிடம் கூறமாட்டாள்.

முதல் தேதி கை நிறைய தன் தந்தை சம்பளம் வாங்கி அதைத் தன் தாய் மடி நிறையப் போடுவதையும், அவர்கள் ஆனந்தமாய் செலவழிப்பதையும் எண்ணி குமுறுவாள் ராஜம். தனது இஷ்டங்களை அவர்களிடம் தெரிவித்து பணம் யாசிப்பதை நினைக்க மாத்திரம் அவள் மனம் சிறிதும் இடம் கொடாது.

* * *

சொத்தை ஒப்புக்கொண்ட முதல் வருஷம் தனது அனாவசியமான நகைகளையெல்லாம் விற்று முக்கியமான கடனுக்குக் கொடுத்தாள், ராஜம். அப்பொழுது இந்தச் சட்டம் வரப்போகிறதென்று யாருக்குத் தெரியும்? மறு வருஷம் வெள்ளம் வந்து குருவை விளைச்சலையும் சம்பா நாத்துக்களையும் அடித்துக்கொண்டு போய்விட்டது. மந்திரி, கலெக்டர், எல்லோருக்கும் தந்தி பறந்தது. நமது காங்கிரஸ் மந்திரியாக விருக்கவே அதிகாரிகள் ஓடிவந்தார்கள். கலெக்டரும் காட்சியளித்தார். வெள்ளத்தைஉண்டுபண்ணும் ஏரியை உடைத்து விடும்படி உத்திரவாகியது. பத்து வருஷமாய் கரடியாய்க் கத்தி வாய் மூடியிருந்த மிராசுதார்கள் அடுத்த வருஷத்திற்காவது கவலை விட்டதே என்று சர்க்காரை வாழ்த்தினார்கள். ஆனால் ஆயிர ரூபாய் வாயிதாக்காரனுக்கு நூறு ரூபாய் தான் தள்ளுபடி ஆகியது. இதனால் என்ன லாபம்? குருவை விளைச்சலாகித் தயாராகவிருந்தது. சம்பா நடவு பூராகவும் ஆகிவிட்டது. ஆகையால்

வாயிதாக் கொடுக்கவேண்டியது தான் என்றால் என்ன பரிதாபம்! களத்தில் பிடி நெல் அறுத்துப் போட்டோமா?

காங்கிரஸ் வந்துமா இந்தக் கஷ்டம் என்று எல்லோரும் பொறுமினார்கள். எத்தனையோ மஹஜர் எழுதி எழுதி இங்கியும் பேபரும் செலவழிந்ததுதான் மிச்சம். சீக்கிரத்தில் நல்ல உயர்ந்தமுறையில் பரிகாரம் செய்வார்களென பல பத்திரிகைகள் சமாதானம் செய்தன.

அப்பொழுதும் ராஜத்தை சமாதானப் படுத்தினான் கோபு. "ஊரே கஷ்டப்படும் பொழுது நாம் மாத்திரம் அதற்கு விலக்கா?" என்றான். ராஜம் வாய்திறக்கவில்லை. ஜமாபந்தி முடிந்ததும் ஒரு நாள் "ராஜம்! வாயிதா முழுவதும் எவ்வளவு ஆயிற்று? வரவில் செலவு போக மிச்சம் எவ்வளவு இருக்கிறது?" என்றான் கோபு. ராஜத்தின் கண்கள் கலங்கியன.

"நீங்கள் நெல் விற்றுக் கொடுத்தது எண்ணூத்தைம்பது ரூபாய். வாயிதா எழுநாத்தி முப்பத்தைந்து. மிச்சம் நூத்திப் பதினைந்து ரூபாய்கள்தானிருக்கின்றன. விரைக்காக வைத்திருக்கும் நாற்பது கல நெல்லும், வீட்டுச் செலவுக்காக வைத்திருக்கும் ஐம்பது கல நெல்லும்தான் பொக்கிஷம். இதில் வட்டி வாசி எப்படி கொடுப்போம்? குடும்பம் எப்படி நடத்துவேன்?" என்றுசொல்லி முடிக்குமுன் அவள் கண்களில் கண்ணீர் பெருகி ஓடிவிட்டது. கோபு பேசாமல் எழுந்து சென்றான்.

* * *

மறு வருஷம் ஆனி முதல் ராஜம் குருவைதான் போடவேண்டுமென்று துளைக்க ஆரம்பித்துவிட்டாள். கிராம வாசத்தில் பழகி அவளுக்கு பயிர்த் தொழிலில் நல்ல தேர்ச்சி இருந்தது. "நீங்கள் வாயிதாவுக்கு பயந்து ஒரே போகம் சாகுபடி செய்வதும் அதை வெள்ளமோ மழையோ அழித்து விடுவதும் போதும். இதே நிலையில் எப்படிக்காலம் தள்ளுவது? பூராவும் குருவை தெளித்து விடுங்கள். இந்த வருஷமாவது குழந்தைகளுக்கு ஒரு நல்ல துணிமணி வாங்க உதவட்டும்" எனப் பிடிவாதம் செய்தாள் ராஜம்.

கோபாலன் உடனே பிரசாரத்திற்கு ஆரம்பித்தான். ஊரில் அவன் வார்த்தைக்கு மதிப்பு அதிகமாகையால் எல்லோரும் ஆவலாய் குருவை தெளித்தார்கள். ஆனால் தெய்வம் விவசாயி பங்கியில்லை. முதல் வருஷம் வெள்ளம் செய்த உபகாரத்தை இவ்வருஷம் புரட்டாசி முதலில் மழை செய்துவிட்டது. காணிகள் எக்கல் அடிக்காமல் தப்பினால் போதுமென்றாகி விட்டது. குடியானவர்கள் மனம் சலிக்காமல் கடன்வாங்கி சம்பா தெளித்தனர். காலம் தவறி முதலிலேயே மழை பெய்து விட்டபடியால் காலத்தில் மழையில்லாமல் சம்பாப் பயிர்கள் துவண்டன.

"மந்தாரப் பொழுது மதிகெட்ட பெண்டுகளுக்குக் கேடு" எனக் கூறிக் கொண்டே உள் நுழைந்தான் கோபு. கூடத்தில் செம்மண் கோலம் இட்டு விட்டு இழைக் கோலம் போட்டுக்கொண்டிருந்த ராஜத்தின் முகம் சிவந்தது. "ஆமாம்! எப்பொழுதும் என்னைக் கேலி செய்வதுதான் வேலை. காலை முதல் மூச்சு விடாமல் அலைந்து ஓய்ந்து போய்விட்டது. இன்னமும் இரவு சமையலுக்கு எற்பாடு செய்த வழியைக் காணோம்" என்றாள் ராஜம்.

"கோபித்துக் கொள்ளாதே. விளையாட்டை வினையாய் எடுத்துக்கொள்ளாதே. நான் மாத்திரம் சும்மாவிருந்தேனா! களத்தில் கிடந்த சடைச் சம்பா நெல்லை எல்லாக் குடிகளுக்கும் பொங்கல் செலவுக்குக் கொடுத்துவிட்டு குழித்தலை செட்டி கடையெல்லாம் அலைந்து விட்டுத் தான் வருகிறேன்" என்று கோபாலன் கூறி முடிக்குமுன் ராஜம் கோபமெல்லாம் எங்கோ ஓடி மறைந்தது. கை வேலையை அப்படியே போட்டு விட்டு அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

கோபுவுக்கு பல விதமும் அப்பொழுது கஷ்டகாலம். கோபுவின் தாய் மாமனுக்கு அவன் தந்தை ஆயிர ரூபாய் தர வேண்டும். அதற்கு வட்டி ஒன்றரை தான். வட்டியும் முதலுமாய் ஆயிரத்துக்கு இரண்டாயிரத்திநூறு ஆகிவிட்டது. வட்டிக்கு நூறு ரூபாய்தான் செல்லாகி இருந்தது. புதுச் சட்டபடி அசல் ஆயிரத்தைத் தந்து விடுவதாக கோபு அவருக்குக் கடிதம் எழுதினான். அவர் இரண்டாயிரத்திற்கு

தம்பிடி குறைந்தாலும் வாங்க முடியா தென்றும் லாயர் நோட்டீஸ் கொடுத்து விட்டுக் கேஸும் போட்டுவிட்டார். சில வக்கீல்கள் பிராமிஸரி நோட்டுக்கு இந்த சட்டம் கட்டுப்படுத்தாதெனக் கூறி கேஸ் ஜயிக்காதென்று விட்டார்கள். இது அப ஜயமானல் செட்டி கடையில் வாங்கி இருக்கும் கடன்களுக்கு வழிதானென்ன? அவன் மென்னியை அழுந்தத் திருகிவிடு வானே? இந்தக் கவலையால் கேஸ் வெளி வருமுன் அங்காவது கடன் வாங்கி மாமன் கடனைத் தொலைத்து விடவே அவன் பெரி தும் விரும்பினன்.

"ராஜி! இனி விவசாயிகளோ, மிராசு தார்களோ, சமுத்திரத்தில் இறங்க வேண்டியதுதான் போலிருக்கிறது. இனி மிராசுதார்கள் ஜீவிக்க எவ்விதமும் வழியைக்காணேம். நில அடமான பாங்கிக்கு மனுப் போட்டு கையே தேய்ந்து விட்டது. தாசில்தாரைப் பார்த்துப் பார்த்துக் கண் பூத்துப் போய் விட்டது. அவர் அந்தப் பணம் சாங்ஷன் செய்யுமுன் என் பிள்ளை கூட மேஜராகிக் குடும்பத்தைப்பார்க்க வந்து விடுவான்" என்று கூறினன் கோபாலன்.

அவன் அம்மாதிரி மனம் தளர்ந்து பேசியதே கிடையாது. ராஜத்தின் மனம் மிகவும் புண்பட்டது. "ஹே! பூமா தேவி! உன் குழந்தைகளிடம் உனக்கேன் இந்தக் கோபம்? தாய்க்கு அன்பில்லாத பிள்ளையுண்டா?" எனப் புலம்பினள்.

* * *

திருச்சிக்காவது சென்று நிலத்தை அடமானம் செய்து ஏதாவதொரு பாங்கியில் பணம் வாங்கி வருவதாகக் கூறினன் கோபாலன். ராஜமும் சம்மதித்து பகவானைப் பிரார்த்தனை செய்து கோபாலனை வழி அனுப்பினள். பெரிய பாங்கி முழுகி விட்டதால் ஒருவராலும் கடன் கொடுக்க இயலாதென எல்லா பாங்கி நிர்வாகிகளும் கையை விரித்து விட்டார்கள்.

கோபாலனல் ஊருக்கு திரும்பவே முடியவில்லை. ராஜத்தின் முகத்தை எப்படிப் பார்ப்பது? எந்த விதமான ஏற்பாடு செய்வது? ஒன்றும் தெரியாமல் குழம்பினன். அவன் வீட்டிற்குள் நுழைந்ததும் அவன் முகமே காரியத்தின் பிரதிபிம்பத்தைக் காட்டிவிட்டது. ராஜம் "என்ன ஆயிற்று?" எனக் கேட்கக்கூட தைரியமில்லாமல் பிரமித்து நின்ருள்.

"ராஜம்! வாழ்வில் துளி சுகத்தைக் காணேம். இந்தப் பாழும் பணமெல்லாம் எங்கு ஓடி ஒளிந்து கொண்டதோ! பதினைரும் தேதி ஏலம் என்று போட்டிருக்கிறது. அதற்குப் பிறகு மாமாவைப் பார்த்துப் பிரயோஜனமில்லை. நான் திருச்சி போனல் வர ஒரு வாரம் ஆகும். இருபதாம் தேதி வாயிதாவுக்குக் கிட்டி போட ஆரம்பித்து விடுவார்கள். நெல் வயலில் இருக்கையில் வாயிதா எப்படி கொடுக்கிறது? சோழதேசம் போல் நம்மிடமும் பிப்ரவரி மாதத்தில் வாங்கிக்கொள்ளக் கூடாதா? இந்த முதல் வாயிதா கண்டத்தை எப்படி தாண்டப் போகிறேம்? 'தச்சன் அடித்த தலைவாயிலெல்லாம்' நுழைந்து விட்டேன். இந்த கவர்மெண்டு வந்தும் நமது சிரமங்களுக்குச் சீக்கிரம் நிவர்த்தியில்லையெனில் விவசாயிகளை கவனிப்போர் யார்? இவர்கள் வருவதற்கு முந்தியாவது, இவர்கள் வந்து எல்லாக் குறைகளையும் நிவர்த்தி செய்து விடுவார்களென்னும் நம்பிக்கையாவது சிறிது ஊக்கமளித்து வந்தது. ஓர் நம்பிக்கையுமில்லாமல் உலகில் எப்படி ஜீவிப்பது? அடுத்த வருஷத்தைக் கண்டவர் யார்? நம்மைக் கண்டது யார்?" எனப் பலவிதமாகச் சொல்லிப் பிரலாபித்தான்.

ராஜம் அவனைச் சமாதானம் செய்து விட்டுத் தன் காரியத்தைக் கவனிக்கச் சென்ருள். இரவு இருவரும் தூங்கவில்லை. மறுநாள் சங்கராந்திப் பண்டிகை உலக ஒப்பந்தம் போல் நடைபெற்றது.

மத்தியானம், ராஜம் மெதுவாய் கோபாலனிடம் வந்து நின்ருள். அவளுக்கு ரோஸமும் கோபமும் பொங்கிக் கொண்டிருந்தது. தன் தலையை அடகுவைத்தாவது மாமன் பணத்தைக் கொடுத்துவிட வேண்டுமென அவள் மனம் அடித்துக் கொண்டிருந்தது. "என்ன! சும்மா படுத்துக் கொண்டிருந்தால் காரியங்கள் நடப்பது தான் எப்படி?" என்ருள் ராஜம்.

"நான் என்ன செய்ய? என்னல் முடிந்த வரையில் அலைந்தாகி விட்டது" என்று சலிப்புடன் கூறினன் கோபாலன்.

"இனிக் கவலைப்பட்டு சாத்யமில்லை. இந்த சங்கிலி முப்பது பவுன். இதையும் இந்தக் கம்மலையும் எடுத்துக் கொண்டு

போய் அடகுவைத்து வாயிதாவையும் கட்டி மாமாவுக்கும் கொடுத்துவிடுவோம். பிறகு தேவியிருக்கிறுள் பார்த்துக்கொள்வோம்'' என்றுள். தனது துக்கம் தெரியாமல் இருக்க முகத்தையும் மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

''மாதப் பிறப்பும் அதுவுமாய் ஏன் இந்தக் கம்மலைக் கழட்டினுய் ராஜீ, போதும் மனது வெடித்து விடும் போலிருக்கிறது. வெள்ளம் சாண் ஓடினுல் என்ன? முழம் ஓடினுல் என்ன? தலை விதிபோல் நடக்கட்டும். என்னுல் இதையும் கொண்டு போய் வைக்க முடியாது'' என்று கூறினுன்.

''இல்லை. நீங்கள் மனம் தளரக்கூடாது. நமது முயற்சி யாவையும் செய்து பார்த்து விட வேணும். பிறகு கடவுள் இருக்கிறுர். நான் துளியும் கவலை அன்னியில் இருக்கையில் நீங்கள் ஏன் மனம் தளர வேண்டும்? கிளம்புங்கள்'' என்றுள் ராஜி.

''இன்று பாங்கி கிடையாது. விடுமுறை'' என வெடித்த குரலில் கூறினுன் கோபு. மறுநாள் காலை நகைகள் வெளிக் கிளம்பி பாங்கியை அடைந்தன. முதல் வாயிதா இருநூறையும் கட்டிவிட்டு மாமாவிடத்திற்குப் பிரயாணமானுன் கோபாலன். வண்டியும் கண்ணுக்கு மறைந்தது. ராஜியின் கண்களில் தடுக்கப்பட்டிருந்த கண்ணீர் மடை திறந்த கால்வாய்போல் ஓடலாயிற்று. போன வருஷம் வைத்த நகைகளையே இன்னமும் திருப்ப வழியைக் காணுேமே, இது எப்பொழுது திரும்புமோ?

---


## அறிக்கை

கீழ்கண்ட இடங்களில் 'பாரத மணி'யை விற்க ஏஜண்டுகள் தேவை. 25 பிரதிகளுக்குக் குறைந்து ஏஜன்ஸி கொடுக்க முடியாது. டிபாஸிட் கட்டக் கூடியவர்களே விண்ணப்பிக்கவும்.


| | |
|---|---|
| உதகமண்டலம் | திருமயம் |
| நாகூர் | திருத்துரைப்பூண்டி |
| விழுப்புரம் | நன்னிலம் |
| திண்டிவனம் | பொள்ளாச்சி |
| பட்டுக்கோட்டை | கரூர் |
| மானுமதுரை | திருவனந்தபுரம் |

மானேஜர்.

## விசேஷ அறிக்கை

முனிசிபல் எல்லைக்குட்படாத கிராமப் பிரதேசங்களில் ஐந்து சந்தாதாரர்கள் சேர்த்துக்கொடுக்கும் நண்பருக்கு ஒரு வருஷத்திற்கு 'பாரத மணி' இனுமாக அனுப்பப்படும்.

மானேஜர்.




## பூர்வ கதை

கண்டிராக்டர் லம்போதர முதலியார் மனைவியை இழந்தவர். தன் தாயார் தேவானையம்மாளுடனும், பிள்ளை தணிகை வேலனுடனும், மருமகள் புனிதவதியுடனும் வசித்து வந்தார். புனிதவதி சிறுவயதில் பெற்றோரை இழந்தபடியால் முதலியார் அவளைக் காப்பாற்றும்படி ஆயிற்று. புனிதவதி தணிகைவேலனைக் காதலித்தாள். ஆனால் தணிகைவேலனுக்கும் புனிதவதியின் வகுப்புத் தோழியான சிவகாமிக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது.

புனிதம் தாங்க முடியாத துக்கம் அடைந்தாள். தன்னை தணிகு நன்றாக அறிந்து கொள்ளாமல் இப்படிக் கலியாணத்திற்குச் சம்மதித்தானே என்று மனம் புழுங்கினாள். வேதனை தாங்காமல் அன்றிரவு தற்கொலை செய்து கொள்வதென்று தீர்மானித்தாள். ஆனால் சிறிது நாழிக்கெல்லாம் அவள் முன் செய்த தீர்மானம் மறைந்தது. துயரம் வருவதெல்லாம் ஆசையால்; ஆசையால் ஆசையைக் களைந்துவிட்டால் துயரப்படவேண்டியதில்லை யல்லவா?...என்று கேட்டுக் கொண்டாள். ஆகவே அவள் பற்றைத்துறந்த ஓர் சந்நியாசினியாகக் காலங்கழிக்கத் துணிந்தாள்.

தணிகுவுக்கும் சிவகாமிக்கும் கல்யாணம் நடந்து இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. புனிதம் மட்டும் கல்யாணம் செய்து கொள்ளாமல் துறவி வாழ்வு நடத்தினாள். தேவானையம்மாளும் சிவகாமியின் தகப்பனார் சம்பந்த முதலியாரும், எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவள் தீர்மானத்தை அசைக்க முடியவில்லை.

இப்படி அவள் ஐந்து வருஷங்கள் காலந் தள்ளி விட்டாள்.

ஒரு நாள் சிவகாமிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அதனால் அவள் மிகவும் இளைத்து படுக்கையோடு படுக்கையாகக் கிடந்தாள். சிவகாமியின் தேகநிலை கவலைக்கிடமாயிற்று. முதலியார் எவ்வளவோ சிறந்த வைத்தியம் செய்துங்கூட கடைசியில் சிவகாமி உயிர் நீத்தாள்.

இதனால் தேவானையம்மாளுக்கு மூளை குழம்பிப் பயித்தியம் பிடித்தது. தணிகை வேலன் தந்தையைப் போல மனைவியற்றவனானான். அடிக்கடி சிவகாமியின் ஞாபகம் வந்து அவன் மனதைக் குத்தி வேதனை செய்யும். சிவகாமியின் எழில் முகம் அவன் உள்ளத்தே தோன்றி மறையும். சிவகாமி தன்னைப் பார்த்துச்சிரித்து ஏதோ கேள்வி கேட்பதுபோல அவன் கற்பனை உள்ளத்தில் ஓர் பிம்பம் தோன்றும்.

(இனிமேல் படிக்கலாம்)

## 10

## மாறுதல்

மணி ஏழு. நிலவு கொஞ்சமாய் அவ்வறையின் சாளரத்தின் வழியாய்ப் படிந்திருந்தது. ஒன்றும் தெரியாதவனாய் ஒரே மயக்கத்தில் ஆழ்ந்திருந்தான் தணிகைவேலன்.

“என்ன! தணிகு! விளக்குக்கூட ஏற்றாமல் என்ன செய்துகொண்டிருக்கிறாய்? உடம்பு சுகமில்லையா? நீ எங்கேயோ வெளியே சென்றிருக்கிறாய் என்றல்லவோ எண்ணியிருந்தேன்? வந்தது முதல் இங்கேயா இருக்கிறாய்? நீ இங்கிருப்பது தெரிந்திருந்தால்சின்னப்பையனையாவது கொண்டுவந்து விட்டிருப்பேனே. இரண்டுமாய்ச் சேர்ந்து அவளைக் கொல்லுகிறதுகள். சமாதானம் செய்ய மாட்டாமல் தவிக்கிறாள். நாமாவது வைத்துக்கொள்ளுவோமென்று கூப்பிட்டால் வரமாட்டேனென்று அவளிடம் போய் புகுந்து கொள்ளுகிறதுகள்” என்று சொல்லியவராய் சம்பந்த முதலியார் அவ

னருகில் சென்று நெற்றியில் புறங்கையை வைத்துப் பார்த்தார்.

தணிகு அப்பொழுதே தூக்கத்தினின்றும் விழித்தவன்போல் "என்ன! மாமாவா? எப்பொழுது வந்தீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே எழுந்து உட்கார்ந்தான்.

"என்ன தணிகு? உனக்கென்ன உடம்பு? தூங்கினுயா?" "இல்லே. இல்லே. ஏதோ ஆலோசித்துக்கொண்டிருந்தேன்." "என்ன ஆலோசனே வேண்டிக் கிடக்கிறது? என்ன வீண் யோசனே? பெற்று வளர்த்த நானே உதறித் தள்ளிவிட்டு மேல் நடப்பதைப் பார்க்கிறேன். உலகத்தில் இன்பமும் துன்பமும் கலந்து வரும் என்று சொல்லுகிருர்கள். இன்பமாவது மண்ணுங் கட்டியாவது துன்பம் தான் தெரிகிறது. ஓய்ச்சல் ஒழிச்சலில்லாமல் துன்பப்பட்டுக் கொண்டே தானிருக்கிறோம். இந்த லக்ஷணத்தில்தான் நீ பெரியவன், நான் சிறியவன், நீ ஏழை, நான் பணக்காரன் என்றும், நீ மேல்சாதி, கீழ்சாதி என்றும் ஓயாமல் சண்டையும் சச்சரவும் சொல்ல முடியவில்லே. துன்பமே இல்லாமலிருந்து விட்டதோ மனிதர்கள் படும்பாடு வேறு என்னமோ? போனது போயிற்று. இந்தக் குஞ்சுகளாவது நன்ருயிருக்க வேண்டாமா? நீ உடம்பைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டால் அந்தக் குழந்தைகளின் கதி என்ன? அந்தப் பெண்—அந்தப் புனிதம் இவைகளின் பேரிலேயே தானே உயிரை வைத்துக் கொண்டிருக்கிருள்? அவள் கதி என்ன? அவள் என்றைக்கும் சன்யாசிக் கோலமாய் உங்கள் வீட்டிலேயே சேவகம் செய்துகொண்டு உட்கார்ந்திருப்பாளா? மேல் வருஷம் கலியாணமாகி அவள் புருஷன் வீடு போய் விட்டால், பைத்தியமும் கிழமும் குழந்தைகளுமாய் உன் வீடு என்ன அலங்கோலப்படும்? எழுந்திரு. உன் உடம்பை நீ கவனித்துக் கொள்ளாவிட்டால் எப்படி? எழுந்திரு சாப்பிட வா" என்று கூப்பிட்டார் சம்பந்த முதலியார்.

தணிகு இறங்கிக் கீழே வந்தான். கற்பகம் செய்யுள் நெட்டுருச் செய்துகொண்டிருந்தாள். தம்பி அவளருகில் உட்கார்ந்து கோலியாட்டத்தில் தான் ஜயித்த விஷயத்தைப்பற்றி விவரித்துக் கொண்டிருந்தான்.

மௌனப்பெண்ணுய் புனிதம் குழந்தைகளேத் தூங்க வைத்துக்கொண்டிருந்தாள். உடல் மெலிந்து அரையுடம்பாயிருந்தது. முகம்மட்டும் ஒருவிதமான சோர்வுமின்றி அன்றலர்ந்த புது மலர்போல் காணப்பட்டது. மிகுந்த வாத்ஸல்யத்துடன் அவளேப் பார்த்த வண்ணம் சமையலறைக்குச் சென்ருர் சம்பந்த முதலியார். தணிகு ஒரு விஞடி நின்று தொட்டிலில் கிடந்த குழந்தையைப் பார்த்தான். உடனே சோகம் பொங்கின புனிதத்தின் கண்களேப் பார்த்தான். ஆஹா! அவன் மனதில் அப்போது உண்டான புரட்சி எத்தகையது? ஒரு மனிதன் மனதில் திடீரென்று எழும் எண்ணங்களால் எப்படிப்பட்ட அற்புத மாறுதல்கள் உண்டாகின்றன?

## 11

## ஆனந்த வெள்ளம்

அன்று சித்திரா பௌர்ணமி. நிலவொளியின் அழகிலேயே ஈடுபட்டவனுய் மேல்மாடியில் நிலா முற்றத்தில் உட்கார்ந்திருந்தான் தணிகை வேலன். குழந்தைகள் வெகு உற்சாகத்துடன் 'நிலா நிலா வா வா' என்று பாடிக்கொண்டும் 'நிலாவா நிழலா' விளேயாடிக் கொண்டுமிருந்தன.

லம்போதர முதலியார் வெகு ஸ்வாரஸ்யமாய் வெற்றிலேயை மென்றுகொண்டிருந்தார். தேவானேயம்மாள் வழக்கம்போல் வளேய வந்து கொண்டிருந்தாள். அவளுடைய அந்த நிலேமை வீட்டில் எல்லோருக்கும் சர்வ சாதாரணமாகி விட்டது.

புனிதம் கையில் சொம்பிலே பாலும் ஒரு கெண்டியும் துவாலேயும் எடுத்துக் கொண்டு அங்கே தோன்றினுள்.

"பால் சாப்பிட நேரமாகி விட்டதா என்ன?" என்ருன் தணிகு.

சிறு பெண் வெகு அவசரமாய் ஓடி அவள் மடியிலுட்கார்ந்து, தான்தான் முன்னே என்று சொல்வதுபோல் அந்தப் பையனே நோக்கிச் சிரித்தது.

புனிதம் கெண்டியிலே பாலே ஊற்றிக் கொடுக்க ஆரம்பித்தாள். குழந்தை தனது சிறு வாயைக் குவித்து தூவென்று துப்பினுள். 'குபீ'ரென்று சிரித்தார் முதலியார். அவர் வாயிலிலிருந்த வெற்றிலே எச்சில் நாற்புறமும் சிதறிற்று.

"ஐய்யய்யோ! சொல்லு தாத்தா! எச்சிற் பட்டால் தோஷமில்லே, எறும்பு கடித்தால் பாவமில்லே" என்று பாட்டனுருக்குப் பிராயசித்தம் செய்விக்கலானுள் கற்பகம்.

முதலியார் எழுந்து கீழே சென்ருர்.

தணிகை வேலன் மனம் அன்று ஒரு காரணமுமின்றி ஆனந்த மிகுதியினுல் மலர்ந்திருந்தது.

"சீத மணி நெடுவானக் குளத்திடை,
வெண்ணிலாவே,
தேசு மிகுந்த வெண்டாமரை போன்றனே'.

என்றெரு பாடலுண்டே அது உனக்கு நினைவிருக்கிறதா புனிதம்?" என்ருன்.

புனிதத்தின் முகம் நாணத்தால் சிவந்தது.

"ஏது, முதலியார்வாள் கற்பனே உலகில் இறங்கி விட்டாற் போலிருக்கிறது. ஐயே, அது தமிழ்க் கவியாயிற்றே! இங்கிலீஷிலேயே மூழ்கிய துரைக்கு இது எப்படி நினைவு வந்தது? ஷெல்லி கீட்ஸ், இவர்களுடைய வர்ணனைதானே உனக்குப் பிடிக்கும்?" என்று பரிகாசக் குரலில் கூறினுள் புனிதம்.

"இதென்ன இது? என்றைக்காவது நான் தமிழை இகழ்ந்து பேசினதுண்டா? எனக்கு உன்னைப்போல் மனப்பாடம் பண்ண முடியவில்லே."

"அது கிடக்கட்டும் என் நண்டு என்ன சொல்லுகிறுள் தெரியுமோ?

பால்போல் நிலவெறிக்கும் வெண்ணிலாவே, என்றன்

பாங்கில் விளேயாடவாராய்......"

என்ற அம்புலிப் பாட்டை பாட ஆரம்பித்தான் புனிதம்.

தணிகை வேலன் மௌனமாய் அவள் பாடலேக் கேட்டுக்கொண்டிருந்தான்.

"காதலர் நெஞ்சை வெதுப்புவை நீ யென்பர் வெண்ணிலாவே" என்ற தொடர் அவள் மனத்துள் எழுந்தது. எங்கே அவ் வார்த்தைகள் வாயில் வந்து விடுமோ வென்று பயப்படுபவள்போல் உதட்டைப் பற்களால் கடித்துக்கொண்டாள்.

"இந்தப் பாட்டெல்லாம் எனக்கு வேண்டாம். 'நிலா நிலா வா வா' சொல்லு" என்று வற்புறுத்தினுன் லம்போதரன்.

"அம்மா புனிதம், மணி பத்தடித்து விட்டது. குழந்தைகளேத் தூங்கச் சொல்லு. நாளே ஏழுமணிப் பள்ளிக்கூடமாம்" என்று லம்போதர முதலியார் சொல்லுவது கேட்டு எழுந்தாள் புனிதம்.

தணிகு கற்பகத்தையும், (லம்போதரனேயும்) சின்னத் தம்பியையும் தூங்க வைத்துவிட்டு தானும் படுத்தான். கண்களே மூடியவண்ணம் படுத்திருந்தான். தூக்கம் வெகு தூரத்திலிருந்தது.

ஒருபுறம் சிவகாமியின் குழந்தை முகமும், மறுபுறம் புனிதத்தின் கருணை பொழியும் கண்களும், மாறி மாறித் தோன்றி அவனே வதைக்கலாயின. இன்னதென்று சொல்ல இயலாத ஒரு வகை வேதனேயினுல் அவன் தவிக்கலானுன்.

முன்பு சம்பந்த முதலியார் சொன்னதிலிருந்து அவனும் ஏதோ குழந்தைகளேக் கவனித்துத்தான் வந்தான் என்ருலும் அவன் மனம் சமாதானமடையவில்லே. அவர் சொல்லிய ஒவ்வொரு வார்த்தைகளேயும்பற்றி ஆற அமர யோசிக்கலானுன். அவள் தன்னலம் சிறிதுமின்றி தனக்கும் தன் குழந்தைகளுக்கும் சேவை செய்வதை நினைக்க நினைக்க அவன் மனம் கசிந்து உருகலாயிற்று. அவளே எண்ணுந்தோறும் அவன் உடல் சிலிர்த்தது.

புனிதம் இல்லாத உலகமே இருண்டு விட்டதுபோல் தோன்றலாயிற்று. அவளுடன் பேசிக் கொண்டே இருக்க மனம் துடிதுடித்தது. இளமையிலே அவளுக்குத் தான் பாடங் கற்பித்ததும், வேடிக்கைக் கதைகள் சொல்லிக் கொண்டு இருவரும் ஓயாமல் சிரிப்பதும், ஒவ்வொன்ருய் அவன் நினைவுக்குவர ஆனந்த மிகுதியினுல் அவன் உடல் புளகித்தது.

அவளுடன் சற்றே தனித்துப் பேச விரும்பினுன். ஆனுல் எங்கே தன்னே இழிவாய்க் கருதி அலட்சியம் செய்து விடுவாளோ என்று அஞ்சினுன். பாவம், அவனுடைய சட்ட புஸ்தகங்கள் ஒருவிதமான உதவியும் செய்யச் சக்தி யற்றவைகளாய் மேஜையின்மேல் திறந்து கிடந்தன. வெகு நேரம் அவ்வறையில் முன்னும் பின்னுமாய் உலாவினுன். சற்றுப் படுக்கையில் உட்கார்ந்தான். மறுபடி எழுந்தான். திறந்து கிடந்த புஸ்தகங்களின் தாள்கள் காற்றினுல் மோதுண்டு எழுந்து எழுந்து படுத்தன.

புஸ்தகங்களை மூடி எடுத்து வைத்தான். தீபத்தை ஒருமுறை ஏற்றி அணைத்தான். இப்படி அர்த்தமற்ற செயல்களினால் அலுத்தவனாய் மறுபடி சாய்வு நாற்காலியில் போய் 'பொத்'தென்று விழுந்தான் தணிகு.

ஒரே நிசப்தம் சற்று நேரத்திற்கொரு முறை கீச்சிடும் ஆந்தையின் அலறலைத் தவிர வேறொரு சந்தடியுமில்லை. தூரத்திலுள்ள பெருமாள் கோயில் ஸ்தூபியின் மணி மட்டும் காற்றினால் மோதுண்டு சற்று நேரத்திற் கொருமுறை 'கணகண' வென்றொலித்தது.

அவன் நெடுநேரம் மனதுடன் போராடினான். கடைசியில் கேட்டு விடுவதென்ற உறுதியுடன் தன் அறையை விட்டுக் கிளம்பினான். நா உலர்ந்துபோயிற்று. நெஞ்சும் மார்பும் தடதடவென்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. கால்கள் தடுமாறின. மெல்ல சமாளித்துக் கொண்டு கீழே இறங்கினான்.

என்ன கேட்க வேண்டும்? எப்படிக் கேட்க வேண்டும்? எப்படி முதலில் ஆரம்பிப்பது? புறக்கணித்தால் என்ன சொல்ல வேண்டும்? ஒப்புக் கொண்டால் என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்தவனாய் சிவகாமியின் படத்தைப் பார்த்து "சுவற்றின் மேலிருக்கும் பூனை இந்தப் பக்கம் குதித்தாலும் குதிக்கும் அந்தப் பக்கம் குதித்தாலும் குதிக்கும். எந்தப் பக்கம் குதிக்குமென்று யாராவது சொல்ல முடியுமா? அதுதான் அதிருஷ்டம். எதற்கும் கேட்டுவிடுகிறேன். துணிந்துதான் கேட்க வேண்டும். ஏதாவது வேதாந்தம் பேசித் துறத்தி விட்டால்—நாளைக்கு அவள் முகத்தில் எப்படி விழிப்பது? சபல புத்தி—என்று காறி உமிழ்வாளோ? என்னவானாலும் சரி" என்று தீர்மானித்தவனாய் மாடிப்படிகளிலிருந்தபடியே கூடத்தைக் கவனிக்கலானான். சின்ன நண்டு அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. பையன் ஏதோ 'தத்தே பித்தே' என்று உளறிக் கொண்டிருந்தான். புனிதம் எழுந்து அவன் படுக்கையை மாற்றி வேறு போட்டு விட்டுப் படுத்துக்கொண்டாள்.

தேவானையம்மாள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். வாயிற்புறத்து ஹாலில் பற்பல அபூர்வ ராகங்களில் ஆரோகண அவரோகணக் கிரமமாய் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார் லம்போதர முதலியார்.

புனிதமும் அயர்ந்து தூங்கவில்லை. ஏதோ ஒருவிதமான மன நெகிழ்ச்சியினால் அவளால் தூங்க முடியவில்லை. காலடி ஓசையைக் கேட்டுத் திடுக்கிட்டாள் புனிதம். தணிகு எதிரே நின்றான்.

"என்ன, தணிகு! உடம்பு சுகமில்லையா? அப்பாவைக் கூப்பிடட்டுமா?" என்று மிகவும் ஆவலுடன் கேட்டாள் புனிதம்.

"வேண்டாம், வேண்டாம். தூக்கமே வரவில்லை. குழந்தையின் குரல் கேட்டது. எடுத்துப் போகலாமோ என்று இறங்கினேன். தூங்கிவிட்டான் போலிருக்கிறதே?" என்றான்.

அவன் இருந்த நிலைமையையும் மனத் தடுமாற்றத்தையும் ஒரு நொடியில் கண்டு கொண்டாள் புனிதம்.

"மணி இரண்டரையாகிறதே, இன்னுமா தூங்கவில்லை? தூங்கு" என்று சொல்லியவளாய் சேலையை ஒழுங்குபடுத்திக்கொண்டு கண்களை மூடிக்கொண்டாள் புனிதம். அவள் நெஞ்சு "திக் திக்" கென்று அடித்துக்கொண்டது.

சற்று நேரம் அசைவற்று நின்றான் தணிகு. கடைசியில் ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு "புனிதம்! புனிதம்" என்று கூப்பிட்டான். அவன் குரல் கரகரத்திருந்தது.

"என்ன!" என்று திடுக்கிட்டெழுந்தாள் புனிதம்.

"புனிதம், நான் ஒரே ஒரு வார்த்தை கேட்கவேண்டும். கேட்கலாமா? தப்பிதமாயிருந்தால் மன்னிக்கவேண்டும்."

"இத்தனை பீடிகை என்ன? கேளேன்."


"பிறகு கோபிக்கவோ, மாமா, அப்பா எல்லோரிடமும் சொல்லி இகழவோ கூடாது."

"இல்லை."

"என்னை.......என்னை........."

அதற்குமேல் பேச நாவெழவில்லை. அப்படியே சற்று நேரம் நின்றான்.

(தொடரும்)




# ஹோளிப் பண்டிகை

(ஸ்ரீ. எஸ். லக்ஷ்மண ராவ் பீஷ்வா)

நாம், இப்புனிதமான பாரத தேசத்தில் எவ்வளவோ பண்டிகைகளெல்லாம் கொண்டாடுகிறோம். இவைகளுக்கு ஏதாவது அர்த்தம் உண்டா? எதற்காகக் கொண்டாடுகிறோம் என்பது அறியாமலே, ஏதோ எல்லோரும் செய்கிறார்களே, நாமும் செய்ய வேண்டும், அன்றைய தினம் வடை, பாயஸத்தோடு ஷோக்காக சாப்பிடவேண்டும், என்று நினைத்துத்தான் நாம் செய்கிறோம். இருந்தபோதிலும்கூட, நாம் அதனுடைய அர்த்தத்தை தெரிந்து கொண்டு செய்வது உசிதம்.

சில தினங்களுக்கு முன் ஹோளிப்பண்டிகை நடந்ததே, அது எதற்காக? எதைக் குறித்துச் செய்தோம் என்பதை கொஞ்சம் கவனிப்பது நலம்.

முன்னொரு காலத்தில் நம் இந்தியாவில் ராக்ஷஸர்கள் ரொம்பவும் பராக்கிரமசாலிகளாய் வசித்து வந்தார்கள். அந்த ராக்ஷஸ கூட்டத்தில் 'ஹோளிகி' என்றொரு ராக்ஷஸி இருந்து வந்தாள். அவள் ரொம்பவும் துஷ்ட சுபாவம் உள்ளவள். தினந்தோறும் ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று, அவ்வூரிலிருக்கும் சில குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு வந்து, அவைகளைக் கொன்று புசித்து வந்தாள். இந்தக் கொடூரத்தைப் பார்க்கச் சகிக்க முடியாமல், உலக வாசிகள் எல்லோருமாகச் சேர்ந்து ராக்ஷஸ ராஜனிடத்தில் போய் முறையிட்டார்கள். எல்லாக் குழந்தைகளையும் இந்த ஹோளிகை சாப்பிட்டு வருகிறாள் என்று கேட்டவுடன், அந்த ராக்ஷஸ ராஜனுக்குக்கூட அவர்கள்மேல் கொஞ்சம் இரக்கம் உண்டாயிற்றும். இருந்தபோதிலும் தன்னுடைய வம்சத்தவளாகிய ஹோளிகையினுடைய மனஸைக் கஷ்டப்படுத்தக் கூடாது என்று நினைத்து, ஹோளிகை குழந்தைகளின் மாமிசத்தைப் புசித்துப் பழக்கப்பட்டுவிட்டாளாகையால், ஜனங்கள் அவளுக்கு தினந்தோறும் ஒரு குழந்தையை கொண்டு வந்து கொடுக்கவேண்டும் என்று கட்டளையிட்டான். கொஞ்சமாவது அரசன் நம் மேல் கருணைகொண்டானே என்று நினைத்து, ஜனங்கள் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு குழந்தை வீதமாக அனுப்பிக் கொண்டு வந்தார்கள்.

இதே மாதிரி பல வருஷங்கள் நடந்து வந்தன. ஒரு நாள் ஒரு கிழப்பாட்டியின் பேரப்பிள்ளையை அதற்கு மறுநாள் அனுப்ப வேண்டியகாலம் வந்தது. அந்தப் பாட்டியின் பிள்ளையும், மருமகளும் இறந்து போய் ரொம்ப நாளாகின்றன. இந்தப் பேரப் பிள்ளைதான் அவளுடைய வம்சத்தில் பாக்கி இருந்தவள். ஆகையால் அந்தப்பாட்டி "நான் எப்படி இந்தப் பிள்ளையை அந்த ராக்ஷஸியிடத்தில் அனுப்புவேன்? இவன்தானே என்னுடைய வம்சத்தின் கடைசி பிள்ளை? என்னைக் கடவுள் காப்பாற்ற மாட்டாரா?" என்று அழுது கொண்டிருந்தாள். எல்லோரும் இவளுடைய அழுகையைப் பார்த்துப் பரிதாபப் பட்டார்கள். தெய்வாதீனமாக அன்றையதினம் ஒரு ஏழை பக்தன் அந்தத் தெரு வழியே போய்க்கொண்டிருக்கையில், இவளுடைய அழுகையைக் கேட்டு, உள்ளே நுழைந்து என்ன சமாசாரம் என்று கேட்டு தெரிந்து கொண்டான். அவன் கொஞ்ச நாழி யோசித்து "அம்மா அழாதே! நீ என்னுடைய வார்த்தைப்படி நடந்தால், உன் பேரப் பிள்ளையும் தப்பலாம், உலகமும் தப்பலாம். ஹோளிகையைப்பற்றி யாராவது அயோக்கியத்தனமாகத் திட்டுவதைக்

கேட்டால், அவள் உடனே இறந்து விடுவாள். இது அவளுடைய சாபம். ஆகையால், நீ ஊரிலிருக்கும் எல்லாக் குழந்தைகளையும் சேர்த்து, நாளைய தினம் இவ்விடம் உன் பேரப் பிள்ளையைச் சாப்பிடுவதற்காக வரும்பொழுது, எல்லாக் குழந்தைகளுமாய் சேர்ந்து அவளை வாயில் வந்தபடி நீசமான வார்த்தைகளை உபயோகித்துத் திட்ட வேண்டும். அப்பொழுது அவள் குழந்தைகளைத் துரத்துவாள். ஆனால் குழந்தைகள் இதற்கு பயப்படக் கூடாது. அதற்கு பதில் இன்னும் ஜாஸ்தியாகத் திட்டவேண்டும். அப்பொழுது அவள் அந்த வார்த்தைகளைக் கேட்க சகிக்காமல் இறந்து விடுவாள்'' என்று சொன்னான்.

இதே மாதிரி ஊரார்களிடம் சென்று இந்த சமாசாரத்தைச் சொன்னாள் அந்தக் கிழவி. அந்தக் காலத்தில் ஜனங்கள் யார் என்ன சொன்னாலும் நம்பினவர்கள் ஆனதால், அவர்கள் இவள் பேச்சைக்கேட்டு, ஊரிலிருக்கும் எல்லாக் குழந்தைகளையும் சேர்த்து, அவர்கள் ஹோளிகை வரும்பொழுது என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொன்னார்கள். மறுநாள் அவ்வூருக்குள் ஹோளிகை நுழைந்த பொழுது, இந்தக் குழந்தைகள் எல்லோருமாகச் சேர்ந்து அவளைப் பார்த்து, வாயில் வந்தபடி திட்டினார்கள். உடனே ஹோளிகை குழந்தைகளைத் துறத்த ஆரம்பித்தாள். ஆனால் அக்குழந்தைகள் பயப்படாமல் மேலும் மேலும் திட்டவே, அவள் இவ்வார்த்தைகளைச் சகிக்க வொண்ணாமல் உயிர் நீத்தாள். உடனே குழந்தைகளும், பெரியோர்களுமாய்ச் சேர்ந்து அவளைத் தகனம் செய்தார்கள்.

இந்நிகழ்ச்சி பால்குன மாஸம் அதாவது மார்ச்சு மாதத்தில் பௌர்ணமி தினத்தில் நடந்தது என்று சொல்லப்படுகிறது. ஆகையால் இந்த ஹோளிப் பண்டிகை இந்தச் சரித்திரத்திலிருந்து தான் நடந்து வருகிறது என்று சொல்லுகிறார்கள்.

சென்னையில், மராட்டியர்களும், லாலாக்களும், இதை ஜாஸ்தியாகக் கொண்டாடுகிறார்கள். பாக்கி ஊர்களில் சாதாரணமாக எல்லா மதத்தினரும் இப்பண்டிகையை கொண்டாடுகிறார்கள். இந்தப் பண்டிகை வைதீக சடங்கோடு கூடினதாக இல்லை; சில முட்டாள்தனமான வழக்கங்களோடு செய்யப்படுகிறது. ஆனால் அதற்குக் காரணம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதாவது இந்தப் பண்டிகை தினத்தன்று ஒவ்வொரு வீட்டிலும் அல்லது தெருவில் பொதுவாக ஒரு ஹோளிகையின் பொம்மையைச் செய்து, அதற்கு வேண்டிய தின்பண்டங்களை எல்லாம் படைத்து, ஜனங்கள் எல்லோருமாகச் சேர்ந்து சகிக்க முடியாத கெட்ட பாட்டுக்களெல்லாம் பாடுகிறார்கள். மேலும் தண்ணீரில் சிகப்பு வர்ணம் கரைத்து, அதை ஜனங்கள் மேலெல்லாம் கொட்டி, கண்டபடி ஒவ்வொருவரும் திட்டிக் கொண்டும், இந்த மாதிரி தமாஷாகக் கொண்டாடுகிறார்கள். இந்த சமயத்தில் ஜனங்கள் கெட்ட வார்த்தைகள் சொல்ல அனுமதிக்கப் படுகிறார்கள்.

இராத்திரி ஒரு மணி சுமாருக்கு, இந்த ஹோளிகையின் பொம்மையைக் கொளுத்துவார்கள். அது எரியும் பொழுது குழந்தைகள் 'ஆ - ஆ' என்று வாயில் அடித்துக்கொண்டு அதைச் சுற்றுவார்கள். சில சமயங்களில் தாயார் தன் கைக் குழந்தைகளை அந்த நெருப்பின் மேல் ஒரு கணம் காண்பிப்பார்கள். இந்த மாதிரி செய்வதால், குழந்தைகள் எல்லாவித கஷ்டங்களி லிருந்தும், பயத்தினின்றும் விடுவிக்கப் படுகிறார்கள் என்று நம்பப் படுகிறது.

இந்தப் பண்டிகையை சென்னையிலும், வடக்கேயும் ஹோளி பண்டிகை என்றும், தெற்கே காமன் பண்டிகை என்றும் சொல்லுவார்கள். காமனுடைய விக்ரகத்தையும், அவனுடைய மனைவி "ரதி" என்பவளது உருவத்தையும் செய்து, எத்தினத்தில் ஹோளிகையை எரிக்கிறார்களோ, அதே தினத்திலே, அதே வேளையிலேயே, இவ்விரு உருவங்களையும் எரிக்கிறார்கள். இக் காமன் பண்டிகையை, குழந்தைகளைவிட வயதானவர்கள்தான் ஜாஸ்தி கொண்டாடுகிறார்கள். இந்தக் காமனை எரித்ததைப்பற்றி கவி காளிதாசன் "குமார ஸம்பவத்தில்" ரொம்ப அழகாக வர்ணித்திருக்கிறார். இக் கதை எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

# வலை வீச்சு



## மைசூரில் நெசவுத்தொழில்

சமஸ்தானத்தில் சுமார் 30,000 ஜனங்களுக்குமேல் நெசவுத்தொழில் செய்து வருகிறார்கள். பயிர்த் தொழிலுக்கும், பட்டு உற்பத்தி தொழிலுக்கும் அடுத்த படியாக நெசவுத் தொழில் முக்கியத்வம் வகிக்கிறது. 25,000 தரிகள், சுத்த பஞ்சு வஸ்திரங்களையும், உல்லன் வஸ்திரங்களையும், பஞ்சும் செயற்கைப்பட்டும் கலந்த வஸ்திரங்களையும் உற்பத்திசெய்கின்றன. 5,000 தரிகள் கம்பளி நூல்கள் செய்வதில் ஈடுபடுகின்றன. சரிகை வஸ்திரங்கள், தோவுதிகள், அங்கவஸ்திரங்கள், சால்வைகள் முதலியன உற்பத்தியாகின்றன.

தொழில் இலாகா ஒவ்வொரு ஜில்லாவிலும் கைத்தரிசாலைகள் ஏற்படுத்தி பரிசோதனை செய்துவருகின்றது. சென்ற 10 வருஷங்களாக இலாகா ரூ. 15,000 மேற்படி பரிசோதனைகளுக்காக செலவு செய்துவந்தது. ரூ. 1,50,000 பரிசோதனைச் சாலைகளின் அமைப்புக்காக இலாகா, செலவு செய்தது. மேற்படி சாலைகளுக்கு வேண்டிய சாமான்களுக்காக அதிகமாக ரூ. 50,000 செலவு செய்திருக்கிறது. நெசவுத்தொழிலுக்கு வேண்டிய இயந்திர சாமான்கள் சுமார் ரூ. 21,000 அளவுக்கு விற்பனையாகி இருக்கிறது.

சென்ற வருஷத்தில் நெசவுத் தொழிற்காட்சி கூட்டத்தார் 14 தரிச் சாலைகளில் வேலை செய்துக் காண்பித்தார்கள். 382 கிராமங்களுக்குச் சென்றார்கள். 202 புதிய நெசவுத் தொழில் முறைகளை ஏற்படுத்தினார்கள். 149 நல்ல தரிகளை பூட்டினார்கள். 1,200 நபர்களுக்கு பயிற்சி அளித்தார்கள்.

இதன் அபிவிருத்தி நோக்கத்துடன் இந்த நெசவுத்தொழில் செய்பவர்களுக்கு மிகுந்த உதவி புரிய இலாகா முன்வந்திருக்கிறது.

### நகர சபைகளின் கடமை

இந்தியா இன்னும் நன்றாக மேல்நாட்டு நாகரீகத்துக்கு இரையாகிவிட வில்லை. இது அதிருஷ்டவசம் தான். இதற்குக் காரணம் நம்மிடத்திலிருக்கும் ஸத் கர்மம் தான்.

எல்லா சிறந்த தர்மங்களிலும் கிரகஸ்தன் நடத்திவரும் இல்லறதர்மம் தான் முக்கியமானது.

ஓர் நகரத்தின் அழகு அதன் கட்டடங்களிலும், நீண்ட பாதைகளிலும், ரம்மியமான மைதானங்களிலுமல்ல. நம் ஜனத்தொகையில் முக்கியத்வம் வகிக்கிறவர்கள் மத்திய வகுப்பினர். அவர்கள் இன்புறவ நடத்தும் இல் வாழ்க்கையே அழகு. அவர்களின் இல் வாழ்க்கையை அழகாக செய்ய என்ன நம் முனிஸிபல் சபைகள் செய்திருக்கின்றன?

முனிஸிபாலிடிகள் சாதாரண வெளிச்சத்தை தான் நமக்குக் கொடுக்கின்றன. அவைகள் சுகாதாரம் என்ற வெளிச்சத்தையும் தரவேண்டும். ஜனங்கள் சிறிய இடங்களில் குடி இருக்கிறார்கள் அப்படி இருக்கும் மத்திய வகுப்பு ஜனங்களின் வாசஸ்தலங்களுக்கு ஓர் அழகிய சுத்தமான சமையலறையும், அறிவூட்டும் புத்தகங்களடங்கிய அலமாரியும் அவசியமாக இருக்கவேண்டும்.

அலஹாபாத், பம்பாய், மதராஸ், கல்கத்தா முதலிய நகரங்களின் நகரசபைக் காரியாலயங்களில், ஜனங்களின் இல்வாழ்க்கையை இன்புறச்செய்யும் இலாகா ஒன்று இருக்கவேண்டும். அந்த இலாகாவில் மேல் நாட்டு நாகரீகத்தால் கெடாத ஸ்திரீகளும் புருஷர்களும், உத்தியோகம் வகிக்க வேண்டும்.

—ஸ்ரீமதி ஸோபியா வாடியா

கல்வி அனுபந்தம்

# "உடலினை உறுதிசெய்"

(ஸ்ரீ வி. ரகுநாத ஐயர், பி. ஏ., எல். டி., கார்பொரேஷன் கல்வி அதிகாரி)

"உடலினை உறுதி செய்" என்றார் ஸ்ரீ பாரதியார் தாம் இயற்றின புதிய ஆத்திசூடி நூலில். இதனை தஞ்சாவூர் பக்கம் மாங்குடியில் வசித்த மிராசுதார் சங்கரரின் வரலாறு விளக்கும்.

சங்கரர் பெரும் பணக்காரர். அவருக்கு நிறைய நிலம், தோட்டம், பணம், வீடுகள், பசுக்கள், எருமைகள், கன்றுகள் எல்லாம் உண்டு. தாம் ஒரு பெரியமனிதர் என்று நினைத்து வேலைக்காரர்களைவிட்டு எல்லா வேலைகளையும் அவர் செய்யச்சொல்லுகிற தில்லை. தாமே அநேக வேலைகளையும் செய்வார். தோட்டத்தில் பாத்திகளை வெட்டுவார்; பயிர்களை நடுவார்; தண்ணீர் பாய்ச்சுவார்; மாசூலை வீடுகொண்டு சேர்ப்பார்; அதைச் சந்தைக்குக்கொண்டுபோய் விற்பார். இவ்விதம் வேலைகளைச் செய்து வந்தமையால் வெகு பலசாலியாயிருந்தார்.

அவர் சாப்பிடுவதைப் பார்த்தால் வெகு ஆச்சரியமாயிருக்கும். ஒரு வேளைக்கு ஒரு படி அரிசிச்சாதம் சாப்பிட்டால் தான் அவர் பசி அடங்கும். ஆறு பெரிய வாழைக்காய்களைக் கறி செய்தால்தான் அவருக்குப் போதுமான கறி ஆகும். பலகாரம் செய்தால் சுமார் 25 இட்டலி சாப்பிடுவார். இதைப் பொய் என்று நினைக்கக்கூடாது. அவர் அவல் பலகாரம் செய்ததை நேரில் பார்த்தவரே நம்மிடம் சொன்னார். ஒருநாள் ஒருபடி அவலை, இரண்டு தேங்காய்கள் உடைத்து அவைகளைக் கீறிவைத்துக்கொண்டு, ஒரு குத்துப்பருமன் வெல்லக்கட்டியுடன் சேர்த்து, அதற்குத் தொட்டுக்கொள்ளக் குறைந்தது 20 வெள்ளரிப் பிஞ்சுகளுடன் பலகாரம் செய்தார். சங்கரர் தேக பலத்துக்கு இப்படித்தான் ஆகாரம் உட்கொள்ள வேண்டும்.

சங்கரர் ஒருநாள் 15 மைல் தூரத்திலுள்ள சந்தைக்குப்போய் ஒரு மூட்டை பருத்தி விதையை வாங்கினார். அதைத் தலையில் சுமந்துகொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார். 'கரு கரு' என்று இருட்டிற்று. அந்த நாளில் ரயில் கிடையாது. மோட்டார் பஸ் கிடையாது. கட்டை வண்டியிலாவது, கால் நடையாகவாவது தான் ஊருக்கு ஊர் போகவேண்டும். இராத்திரியில் போவதுகூடாது. ரஸ்தாக்களில் ஊர்களுக்குத் தூரமாக இருக்கும் இடங்களில் திருடர்கள் ஒளிந்துகொண்டிருப்பார்கள். ஒண்டி சண்டியாய்ப் போகிறவர்களை அடித்து அவர்களிடம் இருக்கும் பணம், காசு, சாமான்களை அபகரித்துக்கொள்வார்கள்.

அன்று சங்கரர் தனியாக வருவதைப் பார்த்த சில திருடர்கள் அவரை அடித்து அவர் தூக்கிக்கொண்டுபோன மூட்டையை எடுத்துக்கொள்ள எண்ணினார்கள். அவர்களில் ஒருவன் சங்கரரைப் பார்த்து "அடேய், நில்லடா, இல்லாவிட்டால் உன் மண்டையை உடைத்து காலை முறித்துவிடுவேன்" என்றான். இதற்கா சங்கரர் பயப்படுவார்! அவன் சொன்னதை இலக்ஷியம் செய்யாமல் அவர்பாட்டுக்கு நடந்துகொண்டிருந்தார். வந்துவிட்டது திருடர்களுக்குக் கோபம். "அடேய்! முதலில் உன்காலை முறித்து, பிறகு உன் தலையைப் பிளக்கிறேன் பார்" என்று ஒரு திருடன் ஒரு கம்பை அவர் காலைப்பார்த்து வீசினான். அந்தக் கம்பு தமது காலில் படுவதற்கு முன்னால் சங்கரர் தமது வலதுகாலை முன்னால் வீசினார். கம்பு இரண்டாய் முறிந்தது. 20 அடி தூரத்தில் போய் விழுந்தது. அவர் கொடுத்த உதை கம்பை வீசிய திருடன்மேல் பட்டது. அவன் மூன்று குட்டிக்கரணங்கள் போட்டு, 'அம்மாடா அப்பாடா' என்று கதறிக்கொண்டு தூரத்தில்போய் விழுந்தான். அவன் மூச்சு இழுத்துக்கொண்டு எழுந்திருக்க முடியாமல் கிடந்தான். இதைக் கண்ட மற்றத் திருடர்கள் அவரை அடிக்க வலதுபக்கமாகவும் இடது பக்கமாகவும் ஓடிவந்தார்கள். சங்கரர் நடப்பதை விட்டு சற்று

நின்றார். அவர் தங்களைக்கண்டு பயந்து விட்டார் என்று நினைத்து, "அடியடா, அவரை உதையடா, குத்தடா" என்று கத்திக் கொண்டு அவரண்டை வந்தார்கள். சங்கரர் தலையிலிருந்து மூட்டையை இறக்காமல், அதைச் சுமந்து கொண்டே, வலது கையையும் இடது கையையும் வீசினார். வலது பக்கம் வந்த இரண்டு திருடர்கள் அவர் வலது கையால் அடிபட்டுக் குப்புற விழுந்தார்கள். ஒருவனுக்கு மூக்கு உடைந்து இரத்தம் கொட்டியது; மற்றொருவனுக்கு விலாப்பக்கத்தில் அடிபட்டு, விலா எலும்பு முறிந்து மூச்சுவிட மாட்டாமல் தரையில் உருண்டு கொண்டு கிடந்தான். இடது பக்கம் வந்த ஒரு திருடனை அவருடைய இடதுகை பலமாய் அடித்ததால், அவன் வலது கை எலும்பு முறிந்து 'அப்பா' என்று கீழே விழுந்தான். சங்கரர் ஒன்றும் நடவாததுபோல் ரஸ்தா வழியே சாவகாசமாய்ப்போனார். பார்த்தீர்களா, அவர் பலத்தையும், தைரியத்தையும். அவர் அப்படித் திருடர்களைத் தோற்றுப்போகும் படி செய்து வரும் போது, சுமார் இரவு 8 மணி ஆயிற்று. தஞ்சாவூர் ராஜா அரண்மனைக்குக் கிட்டே வந்தார். அங்கே ஒரு பாகவதர் கதை நடத்திக்கொண்டிருந்தார். பாட்டு, மிருதங்கம், தாளம் கேட்டது. மூட்டையைச் சுமந்து கொண்டே, கவனமாயும் சந்தோஷமாயும் கதையைக் கேட்டுக்கொண்டு நின்றார். ராஜா திகைத்து பார்த்தார். வாட்டமில்லாமல் வளர்ந்த ஆள். பாண்டவர்களில் பீமசேனனைப் போல் பருத்த பலமான உடம்பு. "மூட்டையைக் கீழேவைத்து, கதையைக் கேளுமே" என்றார். சங்கரர் மூட்டையை அலக்ஷியமாக ஒற்றைக்கையால் தூக்கிக் கீழே வைத்தார். கதையைக் கேட்டார். அவர் மூட்டையைத் தூக்கினதைப் பார்த்த ராஜாவுக்கு ஆச்சரியம் இவ்வளவு அவ்வளவு இல்லை. ஸமஸ்தான பயில்வானை வரவழைத்தார்.

அவன் மகா பலமுள்ளவன். சிறுவயது முதலே அநேகவிதமான பலம் கொடுக்கக் கூடிய தேகப்பயிற்சி செய்தவன். இரண்டு கைகளிலும் அநேக மணங்கு கனமுள்ள கரளாக்கட்டைகளை விறுவிறு என்று, ஒரு மணிநேரம் சுழற்றுவது, நமது இரண்டு கைகளாலும் கட்டி அணைத்தால் எவ்வளவு பெரியதாயிருக்குமோ அவ்வளவு பெரிய கருங்கல் உருண்டைகளை 50 அடி 100 அடி தூரம்போய் விழும்படிக் கையால் எறிவது, முதலியவைகளில் தேர்ந்து, உடம்பு கல்போல் இறுகி, யானையைப் போல் பலம் பெற்றவன் பயில்வான். இப்படிப்பட்ட பயில்வான்கள் அநேகரைத் தோற்கடித்தவன்தான் ராஜாவுடைய சபையிலிருக்கும் பயில்வான். அவனைத்தான் ராஜா கூப்பிட்டார்.

ராஜா பயில்வானைப் பார்த்து, சங்கரரைக் காட்டினார். அவர் செய்ததைச் சொன்னார். கதை முடிந்தபின் அவர் கூடச்சென்று, குஸ்திபோட்டு ஜயித்து வரச்சொன்னார். கதை முடிந்து, கூட்டம் கலைந்தது. சங்கரர் மூட்டையைத் தூக்கிக்கொண்டு வீட்டைப்பார்த்து நடந்தார். பயில்வான் பின் தொடர்ந்தான். சங்கரரை எட்டிப்பிடிக்க ஓடினான். மூச்சுவாங்கி மெதுவாக நடந்தான். அதற்குள் சங்கரர் என்ன செய்தார்? வீட்டுக்குப்போய், மூட்டையைக் கீழே இறக்கிவைத்து, ஒரு மைல் தூரத்திலுள்ள தமது தோட்டத்துக்குப் புறப்பட்டார்.

அவர் தோட்டம் எப்படிப்பட்டது தெரியுமா? அதில் மா, தென்னை, பாக்கு, பலா, வாழை ஏழெட்டு தினுசுகள், கொய்யா, முதலிய மரங்கள் வைக்கப்பட்டிருந்தன. பலவித ரோஜா, மல்லிகை, முல்லை, ஜாதி பன்னீர், இருவாக்ஷி, மகிழம்பூ, சம்பங்கி, சண்பகம், பாதிரி முதலிய புஷ்பங்களும் எப்பொழுதும் 'கம கம' என்று வாசனை அடிக்கும்படி அங்கே வளர்ந்திருந்தன. சேனை, சேம்பு, கருணை, அவரை, கொத்தவரை, வெண்டை, புடல், சுரை, பூசணி, வெள்ளரி, குடைமிளகாய் அகத்தி, வெற்றிலை இவையெல்லாம் செழிப்பாக இருந்தன. விடியற்கால மாகையால் மரங்களில் காக்கை, கிளி, மைனா முதலிய பக்ஷிகள் கத்திக்கொண்டும், வானம்பாடி முதலிய பாடுங் குருவிகள் பாடிக்கொண்டும் இருந்தன. இந்தத் தோட்டத்தைச் சங்கரர் தாமே வெட்டி, கொத்தி, பாத்திகட்டி, தோட்டத்தின் நடுவிலுள்ள கிணற்றிலிருந்து ஏற்றம் இறைத்து, ஜலம் பாய்ச்சி, வேளாண்மை விஷயமான பலவித வேலைகளையும் செய்து

வந்தார். இவ்வளவு வேலை செய்ததால் அவர் எவ்வளவு பலம் உள்ளவராக இருக்க வேண்டும்? யோசித்துப்பாருங்கள்.

சூரிய உதயம் ஆயிற்று. தஞ்சாவூர் சமஸ்தானப் பயில்வான் சங்கரர் வீட்டுக்குப் போனான். சங்கரர் வீட்டில் இல்லை. தோட்டத்துக்குப்போய் விட்டார். என்ன செய்வான்? பசிபொறுக்காமல் அவன் சங்கரர் மனைவியைப்பார்த்து "பசிக்கிறது. சாப்பிடவேணும்" என்றான். அவள் ஒரு முழுவாழை இலையை எடுத்துப்போட்டாள். இலையில் ஒரு முழ நீளம் ஒரு முழ அகலம் ஒரு முழ உயரம் இருக்கும்படி சோறு கொண்டு வைத்தாள். கும்பல் கும்பலாக உப்பு, ஊறுகாய், எள் எடுத்து வைத்தாள். எள் எதற்கு என்று பயில்வான் அறியான். "அது எதற்கு" என்று கேட்டான். "எள்ளைப் பிழியும். எண்ணெய் வரும். அத்துடன் உப்பையும் சோற்றையும் பிசியும். ஊறுகாயைத் தொட்டுக்கொண்டு சாப்பிடும்" என்று ஒரு குழந்தை சொல்லிற்று. பயில்வான் எள்ளைப் பிழிந்தான். எண்ணெய் வரவில்லை. ஒரு சிறு பெண்குழந்தை எள்ளைப்பிழிந்து கொடுத்தது. பசி ஆற உண்டான். மிச்சத்தைத் தூர எறிந்தான். "ஏன் எறிந்தாய் சாப்பிடாமல்? அம்மாவிடம் சொல்லுகிறேன் பார்" என்று இன்னொரு சிறு குழந்தை அவனை அதட்டியது.

"சங்கரரைப் பார்க்க வேண்டுமே. என்ன செய்கிறது" என்று பயில்வான் யோசித்தான். குழந்தைகள் சங்கரர் சாப்பிட தோட்டத்துக்குப் பழையது கொண்டு போகப் புறப்படுவதைப் பார்த்தான். தானும் கூடப்போவதாகச்சொன்னான்.

குழந்தைகள் கொண்டுபோன பழையது எப்படிப்பட்டது தெரியுமா? முதல் நாள் இராத்திரி புழுங்கல் அரிசி ஒரு படியைச் சங்கரருக்கு என்று தனியாய் வடித்து, நீர்விட்டு வைத்திருந்தது. அதை ஒரு பெரிய பெண் எடுத்துக்கொண்டாள். தொட்டுக்கொள்ள, கால்படி வடுமாங்காய், ஒரு கிச்சிலிக்காய்ச் சுருள், ஒரு கிண்ணி நிறையக் கீரையும் குழம்பும் சுண்டியது, இரண்டு எலுமிச்சங்காய் ஊறுகாய், இவைகளை இரண்டு சிறுபெண்கள் எடுத்துக்கொண்டார்கள். ஒருபடி கட்டி எருமைத் தயிர், ஒரு தொன்னை உப்பு, ஒரு கிண்ணம் எள் இவைகளை ஒரு பையன் எடுத்துக்கொண்டான். இந்தமாதிரிப் பழையதை இப்போது அநேகர் சாப்பிடுகிறதில்லை. காப்பி, தோசை வந்து பழையதை ஓட்டிவிட்டது.

இப்பேர்ப்பட்ட பழையதைக் குழந்தைகள் தூக்கிக்கொண்டு போனார்கள். பயில்வானும் கூடப்போனான். சங்கரரிடம் போய், குழந்தைகள் 'அப்பா, யாரோ வந்திருக்கிறார்' என்று சொன்னார்கள். சங்கரர் பயில்வானைக் கூப்பிட்டு யார் என்று விசாரித்தார். ராஜா ஆக்கினைப்படி பயில்வான் தம்மிடம் சண்டைபோட்டு ஜெயிக்கவந்திருப்பதாகத் தெரிந்துகொண்டார். தம்மோடு சண்டைபோடப் பலமுள்ளவனா என்று பார்க்கவேண்டும். அதைப் பார்க்க, அவர் தோட்டத்தைகொத்திவிட்டு, களிமண்ணில் ஊன்றிவைத்திருக்கும் மண்வெட்டியைப் பெயர்த்துவரச் சொன்னார். பயில்வான் அதனண்டை போய், அதை அசைத்துப்பார்த்தான். அது அசைகிறதாயில்லை. 'தம்' அடக்கி இழுத்துப் பார்த்தான். அது பெயர்கிறதாயில்லை. சங்கரர் குழந்தைகள் சிரித்தார்கள். "என்ன? எடுக்க முடியவில்லையா?" என்று சங்கரர் கிட்டேவந்தார். மண்வெட்டியை இடது கால் கட்டைவிரல் இடுக்கால் எத்தினர். அது ஆகாசத்தைப் பார்த்துப்போய், அநேகம் குட்டிக்கரணங்கள்போட்டுக் கீழே விழுந்தது. சங்கரர் பலத்தைப் பயில்வான் பார்த்தான். அவருடன் சண்டைபோட முடியாது என்று எண்ணி ஓடிவிட்டான். அவன் போன இடம் ஒருவருக்கும் தெரியாது.

ராஜா இவற்றை எல்லாம் கேட்டு, சந்தோஷப்பட்டார். சங்கரருக்குப் பலவித மரியாதைகள் செய்தார்.

சங்கரர் பலசாலியானது எப்படி? தினந்தோறும் வியர்வை தாரை தாரையாய்ச் சொரிய, தோட்ட வேலை செய்வார். சரியான தயிர், பால், வெண்ணெய் முதலிய சத்துச்சேர்ந்த ஆகாரத்தை அந்தந்த வேளையில் சாப்பிடுவார். உடம்பு கருங்கல்லாயிருந்தது. அம்மாதிரி நம் நாட்டார் யாவரும் "உடலினை உறுதி செய்" வாராக.

# ஒளியின் இயல்புகள்

(ஸ்ரீ ஆர். கே. விசுவநாதன். எம். ஏ., அண்ணாமலை சர்வ கலாசாலை)

ஒலிகளெல்லாம் துடிக்கும் பொருள்களி லிருந்து வெளிப்படுகின்றன. உதாரண மாக வீணையின் கம்பி துடித்தே ஒலியை உண்டாக்குகிறது என்று காணலாம். துடிக்கும் பொருள் காற்று நிரையானால் இத்துடிப்புகளை நாம் எளிதிலே பார்க்க முடியாது. ஆனால் தக்க பரிசோதனைகள் செய்து அவைகளைக் காட்டலாம். ஒலி, தோன்று மிடத்திலிருந்து நமது காதுக்கு எட்ட வேண்டுமானால் நடுவிலே ஒரு பதார்த்த யானம் (Material medium) இருக்க வேண்டியது அவசியம். காற்றே சாமானியமாய் எங்கும் ஒலி பரவுவதற் கான யானமாகிறது. ஒலி, கட்டிப்பொருள் களின் மூலமாகவும், திரவங்கள் மூலமாக வும் பரவும். ஒலிக்குக் காரணமாய் உள்ள பொருள் துடிப்பதனால் ஏற்படும் அதிர்ச்சி காற்றிலோ, நீரிலோ, கட்டையிலோ அலை களை உற்பத்தி செய்து அவ்வலைகள் பரவு வதனால் ஒலி பரவுகிறது என்று அறியப் பட்டது. நாம் கேட்கும் ஒலிகளைத் தொ டர்ந்தன வென்றும் விட்டிசைப்பன வென் றும் இரண்டு வகைகளாகப் பிரித்துக் கொள்ளலாம். ஒலியை உண்டாக்கும் பொருள் தொடர்ந்து துடித்துக் கொண்டி ருந்தால் தொடர்ந்திசைக்கும் ஒலி தோன் றும். இதன் சுருதி என்பது இத்துடிப்பு வேகத்தைச் சார்ந்தது. துடிப்பு அதிகமா னால் சுருதி உயரும். துடிப்புக் குறைந் தால் சுருதி தாழ்ந்து விடும். பொதுவாக துடிக்கும் பொருள்களெல்லாம் ஒலியை வெளியிடுவன வாயினும் அத்துடிப்பு களின் எண்ணிக்கை வரம்புக்குட்பட்டிருந் தால் மட்டுமே நமது காதுக்குப் புலனா கும். துடிப்புகளின் எண்ணிக்கை முப்ப துக்குக் குறைந்தால் அவை ஒரு ஸ்வரமா கச் சேருவதில்லை. ஆகையினால் இந்த எண் கேள்விக்குக் கீழ் வரம்பாகும். துடிப்பின் வேகம் மிதமிஞ்சிப் போய் விட்டாலும் காதிலே அவை புலனாவ தில்லை. உயர்ந்த ஸ்வரங்களைக் கேட்கும் சக்தி வயதைப் பொறுத்தது. சிறு குழந் தைகள் செகண்டிற்கு இருபதினாயிரம் துடிப்புகள் கொண்ட ஸ்வரங்களைக் கேட் கக் கூடும். வயதானவர்கள் பதினைந்தா யிரத்திற்கு மேற்பட்ட துடிப்புகள் கொண்ட ஸ்வரங்களைக் கேட்க முடிவ தில்லை. இவையே கேள்வியின் மேல்வரம் பாகும்.

பதார்த்தங்களெல்லாம் சின்னஞ் சிறு அணுக்களாலானவை என்று அணுஇயக்க வாதத்தால் நாம் அறிகிறோம். இவ்வணுக்க ளெல்லாம் நிரந்தரமான இயக்கத்தை உடையன என்றும், இவை ஒவ்வொன்றுக் கும் இடையே இடைவெளி நிறைந்திருக் கிறது என்றும் அந்த வாதம் கூறுகிறது. திடதிரவ வாயு நிலைகளின் வேற்றுமைக்கு இந்த அணுக்களின் நெருக்க வேற்றுமை யே காரணமாகும். பொருள்களில் சூடேற்ற இவ்வணுக்களின் இயக்கம் அதி கரிக்கிறது. இவ்வாறு சூடேற்றிக் கொண் டே போனால் அப்பொருள்களிலிருந்து முதலில் வெப்பம் பரவுவதை அறியலாம். இவ்வெப்பம் எங்கும் வியாபித்திருக்கும் விசும்பில் அலைகளாகப் பரவி நம்மை அடைந்து நமக்கு உணர்ச்சியை உண்டு பண்ணுகிறது. இவ்வலைகள் சூடேற்றப் பட்ட பொருள்களிலிருக்கும் அணுக்க ளின் துடிப்புக்களினால் விசும்பில் உற்பத்தி யாகின்றன. இன்னும் சூடேற்ற, பொருளி லிருந்துவரும் வெப்பம் ஒளியாக மாறு வதை உணரலாம். இப்பொழுது விசும்பில் பரவிவரும் அலைகள் நமது கண்ணுக்குப் புலனாகின்றன. இவ்வலைகள் ஒளி அலைகள் என்று சொல்லப்படும். நிற்க, எவ்வாறு பதார்த்தங்களின் துடிப் பினால் காற்று யானத்தில் ஒலி அலைகள் உண்டாகி நமக்கு ஒலி புலனாகிறதோ அதுபோலவே, சூடு மிகுந்த பொருள்க ளுடைய அணுக்களின் துடிப்புகளால் விசும்பில் ஒளி அலைகள் ஏற்பட்டு அதனால் ஒளி நமக்குப் புலனாகிறது என்று அறிய லாம். ஒலி பரவுவதற்கு ஒரு பதார்த்த யானம் அவசியம் இருக்கவேண்டும்

ஆனால் ஒளிக்கு அது வேண்டுமென்ற அவசியமில்லை. ஒளி பாழ் இடங்களிலும் செல்லும் தன்மை வாய்ந்தது. மேலும் நாம் கேட்கும் ஒலிகளுக்கு வரம்புக ளிருப்பது போல நாம் பார்க்கக்கூடும் ஒளிகளுக்கும் வரம்புகள் உண்டு. இதைச் சாதாரணமாக அலைநீளத்தில் எடுத்துக் காட்டுவது வழக்கம். மேல் வரம்பு ஒரு அங்குலத்தில் சுமார் முப்பத்தைந்தாயி ரம் பங்கில் ஒன்றென்றும், கீழ்வரம்பு ஒரு அங்குலத்தில் சுமார் அறுபதினாயி ரம் பங்கில் ஒன்றென்றும் விஞ்ஞானிகள் அறிந்தார்கள். அடுக்கத்தைக்(Frequency) கொண்டும் அவைகளின் வரம்பு வித்தியா சத்தைக் கூறலாம். நாம் சாதாரணமாகப் பதினொன்று ஸ்தாயி வரையிலும் ஒலி களைக் கேட்கக்கூடும். ஆனால் நாம் பார்க் கக்கூடும் ஒளியோ ஒரு ஸ்தாயியில் அடங்கி இருக்கிறது. இதிலிருந்து காது கண்ணைக் காட்டிலும் அதிநுட்பமாக விருப்பதை அறியலாம். பொருள்களைக் கொண்டு ஒளியை உற்பத்தி பண்ண அவைகளில் சூடேற்றுவதைத் தவிர இன்னும் பல வழிகள் உண்டு. உதாரண மாக அவைகளின் மூலம் மின்பாய்ச்சல் ஏற்படுத்துவதனால் ஒளியை உண்டுபண்ண லாம். அவைகளின்மீது மின்னுருக்களை (Electrons) மோதும்படி செய்தாலும் ஒளி உண்டாகும். இவ்வாறாகப் பல வழிகளில் விசும்பில், ஒளி அலை களைப் பொருள்களது அணுக்களின் மூலம் உற்பத்தி செய்யலாம்.

இப்பொழுது ஒலி ஒளிகளின் வேகத் தைப் பார்ப்போம். ஒலி ஒளியைவிட மிகக் குறைவான வேகத்தோடு செல்லு கிறது என்பதை நாம் அன்றாட அனுப வத்திலே காணலாகும். இடியும் மின்ன லும் ஒரே நொடியிலே தோன்றுவனவாயி னும் மின்னல் கண்ணுக்குப் புலப்பட்ட பின் சிறிதுநேரம் கழித்தே இடியின் ஒலி நம் காதுக்குக் கேட்கும். சிறிதுதூரத் தில் துணி தோய்க்கும் ஒருவனைக் கவ னித்தால் துணி கல்லின்மீது மோதிய சிறிது நேரம்கழித்தே சப்தம் நமது காதிலே படுவதைக் கவனிக்கலாம். ஒலி ஒரு செகண்டிற்குச் சாதாரண பவனச் சூட்டிலே சுமார் ஆயிரத்து நூறு அடி வீதம் பரவுவதாகக் கண்டுபிடிக்கப்பட் டது. ஆனால் ஒளியோ ஒரு செகண்டிற்கு நூற்று எண்பத்தாறாயிரம் மைல் வீதம் பரவுகிறது.

ஒளி தருப்பணங்களின்மீது தாக்கும் போது அது பிரதிபலிக்கப்படுவதை எல் லோரும் அறிவார்கள். சமதள தருப் பணங்களிலும், கோளத் தருப்பணங்களி லும் பிரதிபலனம் நிகழும்போது சில விதிகள் அனுஷ்டிக்கப்படுகின்றன. அதைப்போலவே ஒலியும் சமதளப் பரப் புகளிலும், கோளப் பரப்புகளிலும் பிரதி பலனம் அடைகின்றது. அப்பொழுது அதே விதிகளும் அனுஷ்டிக்கப்படுகின் றன. உயர்ந்த சுவர்களின்மீது ஒலி பிரதி பலனம் நிகழ்வதை அனுபவத்தில் அறி வோம். எதிரொலியின் நிகழ்ச்சி பிரதி பலனத்தாலேதான் ஏற்படுகிறது. ஒளி ஒரு யானத்திலிருந்து மற்றொரு யானத் திற்குச் செல்லும்போது அதன் திசை மாறிவிடுகிறது. இத்திசை வேறுபாட் டையே ஒளிக்கோட்டம் (Refraction) என்று நாம் கூறுவது. சில விதிகளிற் குட்பட்டு இந்நிகழ்ச்சி உண்டாகிறது. ஒலியும் அவ்வாறே ஒரு யானத்தி லிருந்து மற்றொரு யானத்திற்குப் போகும் போதும் கோட்ட மடைவதைக் கண்டுபிடிக்கப்பட்டது. எவ்வாறு ஒரு முகுள வில்லையைக் கொண்டு சூரிய கிரணங்களைக் கோட்டமடையச் செய்து ஓர் இடத்தில் குவியும் படி செய்யலாமோ அதைப்போலவே கரியமில வாயு நிரம் பிய ஒரு பலூனை (Balloon) க் கொண்டு ஒரு கடியாரத்திலிருந்து வரும் ஒலியைக் கோட்டமடையச்செய்து ஓர் இடத்தில் சென்று குவியும்படி செய்யலாம். ஒளிக் கிரணம் செறிவு (Density) மிகுந்த யானத்திலிருந்து செறிவு குறைந்த யானத்திற்குச் செல்லும் போது பூரண அந்தரப்பிரதி பலனம் (Total Internal reflection) என்ற நிகழ்ச்சி ஏற்படுவ துண்டு. வைரங்களில் காணப்படும் ஜொலிப்பு இப்பூரண பிரதி பலனத்தினால் தான் ஏற்படுகிறது. இதே நிகழ்ச்சி ஒலியின் விஷயத்திலும் ஏற்படுகிறது. இதை மற்றொரு சந்தர்ப்பத்தில் ஆராய லாம்.

# வாலாஜாபாத் பாடசாலை

"வஸந்தன்"

வாலாஜாபாத்திலுள்ள இந்துமத பாடசாலையைப்பற்றி நான் ஏற்கனவே கேள்விப் பட்டிருந்தேன். அந்தப்பாடசாலை பாலாற்றின் கரையில் அழகான இடத்தில் அமைந்திருப்பதாயும், நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு படிப்புத்தவிற தொழில்கள் சொல்லிக் கொடுக்கிறார்களென்றும், பள்ளிக்கூடம் நன்றாக நிர்வகிக்கப்படுகிறதென்றும் கேள்விப் பட்டேன். அத்தகைய அபூர்வமான பள்ளிக் கூடத்தைப் பார்க்க வேண்டுமென்று ஆசை உண்டாயிற்று.

"நீங்கள் வாலாஜாபாத் குருகுலத்தைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று அன்றைக்கு ஒரு நண்பர் கேட்டார். "இல்லை" என்றேன். "இல்லையா? உடனே கட்டாயமாக அதைப் போய் பார்த்துவிட்டு வாருங்கள்" என்று உற்சாகமாகப் பேசினர். "உங்கள் பத்திரிகையில் என்னமோ கிராமம், கிராமப் பள்ளிக்கூடம் என்கிறீர்களே? வாலாஜா பள்ளிக் கூடத்தைப் பார்த்துவிட்டு வந்து அந்தமாதிரிப் பள்ளிக்கூடம் ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று நீங்கள் எழுதவேண்டாமா? போங்கள் உடனே வாலாஜாவுக்கு!..." என்று அறை கூவினர். கல்வி விஷயங்களில் அக்கரை உள்ளவர், அதுவும் ஓர் ஆப்த நண்பர், இப்படிப் பரவசமாய்ப் பேசும்போது நான் சும்மா இருக்க முடியுமா? உடனே போய் பார்ப்பதாய் பிரதிக்ஞை செய்தேன்.

பிரதிக்ஞையை நிறைவேற்ற என்ன செய்யலாம் என்று யோசித்தேன். வாலாஜா சென்னையிலிருந்து எத்தனை மைல்கள், எவ்வளவு சார்ஜ்-இந்தப் பிரச்னைகளை யோசித்துக்கொண்டிருந்தபோது ஒருவர் உள்ளே வந்தார். "நான்தான் வாலாஜாபாத்திலிருந்து வந்திருக்கிறேன்" என்றார். சரி! இவரிடமிருந்து எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளலாம். இனிமேல் கவலையில்லை.


அப்புறம் அவரோடு பேசியதில் அவர் வாலாஜாபாத் பள்ளிக்கூடத்தை நடத்தும் சாக்ஷாத் மாசிலாமணி முதலியார்தான் என்று தெரிந்தது! இன்னும் கேளுங்கள். எங்களையெல்லாம் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக் கொண்டுபோவதற்காக வந்திருந்தார். எப்படியிருக்கிறது? தேடப்போன மருந்து காலில் அகப்பட்டது என்பார்கள். இப்போது கையில் அகப்பட்டது என்றுகூடச் சொல்லலாம்.



மந்திரிகளே, என்ன ஆலோசனை?

மறுநாள் காலையில், நானும் இன்னும் சில கனவான்களுமாக ஏழு பேர்கள் வாலாஜாபாத் பள்ளிக்கூடத்தில் இருந்தோம். போகும்வழியில் சாலையின் இரு புறத்திலும் அழகிய மரங்கள் இருந்தன.

'ஜிலு ஜிலு' வென்று காற்று அடித்தது. சிற்சில இடங்களில் மோட்டாரிலிருந்து கீழே



த(வ)லை பத்திரம்!


இறங்கி அங்கேயே தங்கி விடலாமா என்று கூடத் தோன்றிவிட்டது. ஆனால் நல்லவேளையாக நண்பர்கள் என் மடியில்மேல் இருபக்கத்திலும் உட்கார்ந்து கொண்டிருந்தார்களாகையால் நான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்திருக்க முடியாமல் செய்து என்னைப் பத்திரமாக வாலாஜாவில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்!

வாலாஜா பள்ளிக்கூடத்திற்கு அன்று விடுமுறை யாதலால் நாங்கள் 'வேலை செய்து கொண்டிருக்கும்' பள்ளிக்கூடத்தைப் பார்க்க முடியவில்லை. அது நல்லதாய்ப் போயிற்று. ஏனென்றால் மாணவர் இல்லத்தில் எல்லா மாணவர்களையும் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. பள்ளிக்கூடத்தில் 600 பிள்ளைகள் வாசித்து வருகிறார்கள். சம்பளம் கிடையாது. மூன்றாம் பாரம் வரையில் இருக்கிறது. இந்தப் பள்ளிக்கூடத்தில் வாசித்த பிள்ளைகள் வேறுபள்ளிக்கூடங்களில் நான்காம் பாரத்தில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள்.

இவையெல்லாம் முக்கியமான விஷயங்களல்ல. மாணவர் இல்லத்தின் சிற்சில அம்சங்கள்தான் எங்கள் மனதைக் கவர்ந்தன. வேறொன்றும் வேண்டாம்; ஹாஸ்டல் அமைந்திருக்கும் இடத்தைக் கேளுங்கள். பாலாற்றின் கரையில் மரங்கள் அடர்ந்த சோலையில் விஸ்தாரமான இடத்தில் இல்லத்தை அமைத்திருக்கிறார்கள். பாழாய்ப் போன சீமை ஓடுகளைப்போட்டு விடாமல் கீத்தால் கொட்டகைகள் வேயப்பட்டிருக்கின்றன. இதனால்தான் அந்த இடம் குளிர்ச்சியாக இருக்கிறது. சிறுவர்கள் தேக நலனுக்கு இதைவிடச் சிறந்த இடத்தை இந்தப் பிராந்தியத்தில் வேறெங்கும் பொறுக்கியிருக்க முடியாது.

மாணவர்கள் தங்கும் இடத்தைப் பார்த்தோம். அது ஒரு நீளமான கூடம். கூடத்தில் தொடர்ந்தாப் போல் அலமாரிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு அலமாரி. அந்த அலமாரியில் அவன் தன் படுக்கையையும் ஒரு பெட்டியையும் வைத்திருக்கிறான். அந்த இரண்டும்தான் அவன் சாமான்கள். 300 பையன்கள் எவ்வளவு சுத்தமாக அந்த இடத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஆச்சரியமாயிருந்தது. மூன்று பேர்கள் நமது வீட்டில் இருந்தால் அந்த வீடு எவ்வளவு அல்லோல கல்லோலமாயிருக்கிறது என்பது நமக்குத் தெரியும். ஒரு சாமான் காணாமல் போய்விட்டாலோ—அடிக்கடி அப்படித்தான் போய்விடும்-தேடுவதென்பது ரொம்ப ஸ்வாரஸ்யமான விஷயம். ஒரே களேபரம். இன்னும், வீட்டில் ஒரு குழந்தை இருந்தால் கேழ்க்க வேண்டாம். ஆனால் வாலாஜாபாத் மாணவர் இல்லத்தில் 300 குழந்தைகள் சின்ன இடத்தில் எப்படி வாழ்ந்து வருகிறார்கள் என்பதைப் போய்த் தெரிந்துக் கொள்ளும்படி என் கிருஹஸ்த நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களுக்கு தொழில் சொல்லிக் கொடுக்கிறார்களென்றால் நமது கலாசாலைக




கவலை ஏற்றம்

ளில் சொல்லிக் கொடுப்பதுபோல நீராவி இயந்திரம் வேலை செய்யும் வகையைப் பற்றி

யும், மோட்டாரின் அமைப்பைப் பற்றியும் சொல்லிக் கொடுக்கவில்லை. பணமும் நிபுணரும் அகப்பட்டால் வாலாஜாபாத்திலேயே மாணவர்களைக்கொண்டு மோட்டார் செய்து விடுவார்கள். ஆனால் இப்போது கம்பளங்களும் வேஷ்டிகளும், பொத்தான்களும், சட்டைத் துணிகளும், மேஜை நாற்காலிகளும் தான் மாணவர்களால் செய்யப்படுகின்றன. பையன்களுக்குச் சட்டைத்துணி உற்பத்தி செய்யத் தெரிந்தால் அதைத் தைத்துப் போட்டுக் கொள்ளுவதுதானா பிரமாதம்? நாங்கள் போனபோது ஏழு வயதுள்ள ஒரு சிறுவன் தையல் மிஷினில் உட்கார்ந்து ஜமாய்த்துக் கொண்டிருந்தான்.

இந்தப் பள்ளிக்கூடத்தின் தொழிற்சாலையையும், மாணவர்களையும் பார்த்ததும் வார்தா திட்டம் ஞாபகத்திற்கு வந்தது. வார்தா திட்டம் வெளியாகு முன்னமேயே பள்ளிக்கூட நிர்வாகிஸ்தர்கள் அதன் அம்சங்களை யெல்லாம் இப் பள்ளிக்கூடத்தில் சேர்த்திருக்கிறார்களென்றால் அவர்கள் எவ்வளவு கெட்டிக்காரர்களா யிருக்க வேண்டும்? அந்த மாணவர்கள் எவ்வளவு பாக்கியசாலிகளா யிருக்க வேண்டும்? ஆம்; இக்குழந்தைகளுக்கு ஒரு குறைச்சலுமில்லை; வாழ்க்கையில் பிழைத்துப் போவர்கள் என்று எண்ணினேன்.



பையன்கள் கறி நறுக்குகிறார்கள்!

எங்களுக்காக, மாணவர்கள் தேகாப்பியாசம் நடத்திக் காண்பித்தார்கள். பலவிதமான வேடிக்கைகள் விளையாட்டுக்கள், கத்திச் சண்டை, சிலம்பம், முதலியவை நடந்தன. சிறுவர் விளையாடுவதுடன் நிற்கவில்லை; நெருப்புடன்கூட விளையாடுகிறார்கள். நெருப்புப் பந்தங்களை வைத்துக் கொண்டு சாமர்த்தியமாய்ச் சுற்றி விளையாடுகிறார்கள். ஒவ்வொரு சிறிய மாணவனும் செய்த தேகாப்பியாசத்தைப் பார்த்ததும் எனக்கு அவமானமாயிருந்தது. நான் ஒரு தடவை தண்டால் செய்யப் போய் ‘திடும்’ என்று கீழே விழுந்தபடியால் தண்டால் சாஷ்டாங்க நமஸ்காரமாக மாறிற்று. அப்புறம்; நண்பர்கள் என்னைத் தூக்கிவிட்டு மயக்கம் தெளிவித்தார்கள். ஆனால் அந்தச் சிறுவர்கள் சிரமமில்லாமல் தேகாப்பியாசம் செய்தபோது உண்டான அவமானத்தையும் கோபத்தையும் அப்போது சாப்பிட உட்கார்ந்துக் கொண்டதும் ஆகாராதிகளின் பேரில் காண்பித்தேன்.

மாணவர்கள் நன்றாக வேலை செய்வார்கள், விளையாடுவார்கள், சாப்பிடுவார்கள்; அவ்வளவுதான் என்று நாங்கள் நினைத்தோம். ஆனால் அவர்களுக்குப் பேசத் தெரியும்; அழகாகப் பேசத் தெரியும் என்று காண்பித்தார்கள். மகாத்மா காந்தி, உலக அதிசயங்கள், மாணவர் கடமை, என்பதைப்பற்றி யெல்லாம் அவர்கள் பிரசங்கம் செய்தார்கள். புது சமாசாரம்தான் அவர்களுக்குத் தெரியுமென்பதில்லை. பழைய கால புலவர்களைப்பற்றிக் கூடத் தெரியும். பேச்சுக் கலையைத் தவிர நாடகக் கலையும் தெரியும். சுமார் 10 நிமிஷங்களில் “கற்றறி மூடர்” என்ற நாடகத்தை எங்கள்முன் நடத்திக் காண்பித்தார்கள்.

போகட்டும்; பேசத்தெரிகிறது என்றால் பாட்டில் அவர்கள் சளைத்தவர்களா? பாம்பாட்டிப் பாட்டு, ஓடப்பாட்டு, பாரதி பாடல் எல்லாம் தெரியும். இதெல்லாம் போதாதென்று கண்கட்டு வித்தை கூட அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. எங்கள் முன்னால் சில **மாஜிக்** வித்தைகளைச் செய்து காட்டினார்கள்.

300 சிறுவர்கள் ஹாஸ்டலில் வசித்து வருகிறார்கள் என்று சொன்னேனல்லவா, அது தவறு. முந்நூறு சிறுவர்கள் ஹாஸ்டலை **நடத்தி வருகிறார்கள்** என்று சொல்ல வேண்டும். மாணவர்கள் பண வரவு செலவைக் கவனிக்கிறார்கள்; சுகாதாரத்தைப் பார்த்துக் கொள்ளுகிறார்கள்; சட்டத்தையும் அமைதியும் நிலைநாட்டுகிறார்கள் ஆம்; ஒவ்வொரு இலாகாவும் மாணவர்கள் அதிகாரத்திலிருக்கிறது. மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட **மந்திரிகளால்** ஒவ்வொரு இலாகாவும் கவனிக்கப்படுகிறது. இதுமாதிரி 6 மந்

திரிகள் இருக்கிறார்கள். இந்த மந்திரிகள் சேர்ந்து பிரதம மந்திரியைத் தேர்ந்தெடுக்கிறார்கள்! ஜனநாயகத்துக்கு ஒரு படி மேலே!

இந்தப்பள்ளிக்கூடத்தையும் சிறுவர்களையும் பார்த்தபோதும், சிறுவர்கள் வேலைசெய்யும்போதும், பேசும்போதும், தேகாப்பியாசம் செய்யும்போதும் எனக்கு அவமானமாயிருந்தது என்று சொன்னேன். ஆனால் இரண்டு விஷயங்களால் என் அவமானம் தீர்ந்தது.

முதலாவதாக, என்னை இந்த அவமானத்துக்குள்ளாக்கிய ஸ்ரீ. மாசிலாமணி முதலியாரை "அப்பா! அப்பா!!" என்று 300 பையன்கள் கூப்பிட்டு கஷ்டப்படுத்துவதைக் குதூகலத்துடன் பார்த்தேன். வேண்டும் நன்றாக அவருக்கு! அடுத்த வருஷம் இன்னும் முந்நூறு பையன்கள் அவரை அந்தமாதிரி கஷ்டப் படுத்தவேண்டும்!

இரண்டாவதாக எனக்கு இன்னொரு அல்ப சந்தோஷம்கூட. அதாவது ஜனநாயகத்தையே அவர்கள் அவமானப்படுத்தி விட்டார்களாகையால் நான் எந்த மூலைக்கு?

நல்லது; இந்தப் பள்ளிக்கூடம் இவ்வளவு விமரிசையாக நடப்பதற்குக் காரணம் யார்? ஸ்ரீ மாசிலாமணி முதலியாரும் அவர் தமையனார் ஸ்ரீ பஞ்சாக்ஷர முதலியாரும் தான். இந்த இரண்டு சகோதரர்களும் ராம லக்ஷ்மணர்கள் போல அறியாமை என்ற ராக்ஷஸனை அழிக்க முற்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு இந்தக் கார்யத்தில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. வரவு செலவைச் சரிக்கட்ட ரூ. சுமார் 3500 சென்ற வருஷம் கையை விட்டுப் போட்டிருக்கிறார்கள். இந்தப் பள்ளிக்கூடம் நன்றாக நடைபெற வேண்டுமானால் பொது ஜனங்கள் பண உதவி செய்ய வேண்டும்.

தமிழ் நாட்டில் இத்தகைய குருகுலங்கள் தோன்றுவதில்லை; தோன்றினாலும் நீடிப்பதில்லை, நீடித்தாலும் வளருவதில்லை. அத்தி பூத்தாற்போலுள்ள இத்தகைய உயர்ந்த ஸ்தாபனங்களுக்கு தமிழ் மக்கள் தங்களாலான சிறு உதவியாவது செய்ய வேண்டும். பகவானுக்கு அணில் உதவி செய்யவில்லையா?

வால்ஜாபாத் குருகுலத்தைப் பார்த்து விட்டுத் திரும்பியும் என் மனதில் ஒரே ஒரு உணர்ச்சி உண்டாயிற்று. ஒரே ஒரு கேள்வி பளீரென்று எழுந்தது.

ஆஹா! இந்தமாதிரிப் பள்ளிக்கூடம் ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தால்?......

சுக சௌக்கியங்களுக்கு

பஞ்சேந்திரியங்கள்!

அவைகட்கு உதவி

"ஆறுவது இந்திரியம், பணம்!"

பணம் பெருகுவது

பாங்கிலும் இன்ஷ்யூரன்ஸிலும்தான்

## போஷாக்கில்லாமல் இருக்கிறதா?



உங்கள் கூந்தல்
இயற்கையான ஆகாரமில்லாமல்
உயிரற்றுப் போயிருக்கிறதா?
அப்படியானால் அந்தக் குறையை நீக்க

## 'கெஸ்ரைன'

விலை அணா 12.

**உபயோகியுங்கள்.**

அது கேசத்திற்கு வனப்பையும் போஷாக்கையும்
கொடுக்கக் கூடியது.

**விக்டோரியா டிபோ,**

வடக்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை.

---

உங்களை அவஸ்தைப்படுத்துவது

**சேத்துப்புண்ணா**

அல்லது

**பித்த வெடியா?**

எதானாலும் உடனே

## க்யூராக்ஸ்

உபயோகியுங்கள். நொடியில் குணம்தரும்.

**பாட்டில் விலை அணா 8.**

கிடைக்குமிடம்:—

**மதருஸ் பார்மஸி லிமிடெட்**
நெ. 51, பெரிய தெருவு,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

**ஸ்வயம்ப்ரகாச விஜயம்**

வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி

எழுதியது

ஸ்வயம்ப்ரகாச ப்ரம்மேந்திர சரஸ்வதி அவதூத சுவாமிகளின் வரலாறும், கொள்கைகளும், அவதூத பரம்பரையின் மூல புருஷராகிய தத்தாத்ரேய சரித்திரமும் கீதாசாரமும் நன்கு கூறப்பட்டுள்ள புஸ்தகம்.

விலை ரூ. 2-8-0

**பாரத மணி காரியாலயம்,**

: 312, தம்பு செட்டித் தெரு, :

சென்னை.

---

சாமான்களுக்கு 'ஆர்டர்' கொடுக்கும்பொழுது 'பாரத மணி'யின் பெயரைக் குறிக்கவும்.